விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 25 செவ்வாய்க்கிழமை (11.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 357

விக்னேஸ்வரனுக்கு எதிரான

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் தீர்ப்பு ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச் 24

## போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும்



### ஜனாதிபதி மைத்திரி மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலிற்காக தண்டனை வழங்கப்பட்ட பின்னரும் தொடர்ந்தும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களிற்கு மரணதண்டனை வழங்க வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அறிவுறுத்தியுள்ளார்.

மரணதண்டனை கைதிகள் குறித்த விபரங்கள் தனக்கு கிடைக்காததன் காரணமாக மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவது தாமதமாகின்றது என 24

ஜனாதிபதி மைத்திரியின்

## 7 நாட்களுக்குள் தீர்வு இன்றுடன் நிறைவடைவு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு ஏழு நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

கடந்த 4ஆம் திகதி சுகததாஸ உள்ளக விளையாட்டர 24

## ஜிம் பயிற்சி நிலையம் கும்பலால் அடித்து உடைப்பு

### பெற்றோல் குண்டும் வீசித் தாக்குதல்


(யாழ்ப்பாணம்)

முகத்தினை துணியால் கட்டிய 10 பேர் கொண்ட கும்பல் ஒன்று ஜிம் பயிற்சி நிலையத்தை அடித்து சேதப்படுத்தியதோடு பெற்றோல் குண்டு தாக்குதலையும் மேற்கொண்டுள்ளது. இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலை சுன்னாகத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை முகத்தில் துணி கட்டிய 10 பேர் கொண்ட கும்பல், சுன்னாகத்தில் இயங்கி வந்த ஜிம் நிலையத்தை அடித்துச் சேதப்படுத்தியுள்ளது. அத்துடன், பெற்றோல் குண்டுகளை வீசி தீவைத்து எரித்துள்ளது.

அதனால் அங்கு தீப்பிடித்தது. யாழ்ப்பாணம் மாநகர 24

## தமிழரின் உரிமைக்காக கொழும்பில் ஆர்ப்பாட்டம்



24

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு

# இன்றைய தினமே தீர்ப்பை வழங்குக

### நீதிமன்றைக் கோருமாறு சட்டமா அதிபரிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்து

(கொழும்பு) பாராளுமன்றத்தை கலைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீதான இறுதித் தீர்ப்பை இன்று வழங்குமாறு பிரதம நீதியரசரிடம் கோருமாறு சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார்.

(23-ம் பக்கம் பார்க்க...)

பாராளுமன்றத்தை காலால் உதைத்து

## மைத்திரியும் மகிந்தவும் ஆட்சியை உருவாக்குவதற்கு முயற்சி - ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷ இருவரும் பாராளுமன்றத்தை காலால் உதைத்து தனக்கேற்ற ஆட்சியினை உருவாக்கவே முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண் 02



தீர்ப்பு எதிராக வந்தால்

## பொது வாக்கெடுப்புக்கு ஜனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் கட்டளையை இரத்துச் செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால் பொது வாக்கெடுப்பை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சட்டமா அதிபரை அழைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ஆலோசனை நடத்தினார் என்று அறிய முடிகின்றது.

பாராளுமன்றக் கலைப்புக்கு எதிரான ஜனாதிபதியின் கட்டளைக்கு எதிரான மனுக்கள் 23

## வெளியாகவுள்ள தீர்ப்பு வரலாற்றை உருவாக்கும்

### பிரிட்டன் உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத்தை கலைக்கும் வர்த்தமானி அறிவித்தல் மீதான நீதிமன்றத்தின் தீர்ப்பு வரலாற்றை மாற்றக்கூடிய உருவாக்கும் தீர்ப்பாக அமையும் என இலங்கைக்கான பிரிட்டனின் உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டவுரிஸ் தெரிவித் 23

## நீதிமன்ற தீர்ப்பு தீர்வாகாது!

### - ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் ஒருபோதும் தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு எவ்விதத்திலும் தீர்வினை பெற்றுக் கொடுக்காது எனத் தெரிவித்த பொதுஜன பெரமுன முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ், மக்களே அனைத்து பிரச்சினைகளுக்கும் 23

வட மாகாண தொண்டர் ஆசிரியர்கள்

## ஆளுநர் அலுவலகம் முன் தொடர் உணவு தவிர்ப்பு


23

## மைத்திரியும் மகிந்தவும் ஆட்சியை...

டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்.

பாராளுமன்றத்தை மதிக்காமல் பாராளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் பாராளுமன்றத்தை கலைத்து, பிரதமரை மாற்றியமைத்து நாட்டின் ஆட்சி பலத்தை கைப்பற்றும் நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறு பாராளுமன்றத்தை புறக்கணித்து ஆட்சியை கைப்பற்ற இவர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கே முழுநாடும் எதிர்ப்பினை வெளியிட்டுவருகின்றதே தவிர வேறு எந்த காரணங்களுக்காகவும் இல்லை. பாராளுமன்றம் இல்லாமல் ஒரு நாளும் ஆட்சி புரிய முடியாது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேவை இல்லை என்றதாலேயே 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி மற்றும் பொது தேர்தல்களில் அவருக்கு எதிர்த்து வாக்குபதிவு செய்திருந்தனர்.

அவ்வாறு தேசிய தேர்தல்களில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் தனது வாக்கு பலத்தை பிரயோகித்துள்ள நிலையில் மக்களின் அபிப்பிராயத்தை நிராகரிக்க முடியாது. அவ்வாறே மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை மக்கள் எதிர்பார்ப்பார்களானால் எதிர்வரும் தேர்தல்களில் அவருக்கு ஆதரவாக மக்கள் வாக்களிக்க முடியும். ஆனால் அவ்வாறானவொரு தீர்மானத்திற்கு மக்கள் தயாராக இல்லை என்பதையும் மக்களே வெளிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் எதற்காக இவ்வாறு இந்த பதவியினை மகிந்த பெற்றுகொண்டார் என்றும் எதற்கு இந்த பேராசை என்றும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும் நீதிமன்ற தீர்ப்புகள் இன்று அல்லது நாளை அல்லது வெள்ளிக்கிழமையே கிடைக்கப் பெறும். இதனால் நீதிமன்ற தீர்ப்புகள் கிடைக்கப்பெற்றவுடன் அடுத்த வாரத்தில் பாரிய மக்கள் போராட்டத்தை முன்னெடுப்போம்.

நீதிமன்ற தீர்ப்பு கிடைப்பதற்கு முன்னர் போராட்டம் மேற்கொள்வதால் எந்தவித பயனும் கிடைக்க போவதில்லை. எனவே அடுத்த வாரம் நீதிக்கான மக்கள் போராட்டம் மேற்கொள்ளப்படும் என்றார். (ம)


## அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
## திரு.ச.இரவீந்திரநாதன்
**(SLEAS-II)**

**பிரதிக்கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்)**
**வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்**




(7855)

நீண்ட காலம் யாழ் கல்வி வலயத்தில் விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகராகவும் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் அளப்பெரும் பணியாற்றி இன்று (11.12.2018) ஓய்வு பெறும் திரு.ச.இரவீந்திரநாதன் அவர்கள் தம் ஓய்வுக்காலத்திலும் தமது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளரும், சக உத்தியோகத்தர்களும்
வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்.

## மாடிக் கட்டிட கடை விற்பனைக்கு

**கிளிநொச்சியில் A9 வீதியில் கிளிநொச்சி பன்சலக்கு முன்பாகவும் கார்கில்ஸ் Food City இக்கு அருகாமையில் அமைந்துள்ள மாடிக்கட்டிட கடையும் அதனுடன் சேர்ந்த களஞ்சியசாலை, காணியுடன் சேர்த்து உடனடியாக விற்பனைக்குண்டு.**

**தொடர்பு கொள்ளவும் : 077 270 9606, 070 586 2110**

(C-4662)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாககணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.

(7849)

## காயத்திரி திருமாங்கல்ய சேவை

திருமணம் பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.

(7849)

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE**

Walk –in Interview for the post of Temporary Demonstrator in Nursing, Pharmacy and Medical Laboratory Sciences which is scheduled to be held on 12.12.2018 has been postponed.

Date and time will be informed later.

**Registrar,**
**University of Jaffna.**

(C-4661)

## கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க
## பொதுக்கூட்டம் - 2018

கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவர்சங்க பொதுக்கூட்டம் 22.12.2018 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு எமது கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் சங்க யாப்பு பொதுச்சபையின் அங்கீகாரம் பெறப்படவுள்ளதுடன் யாப்புக்கு அமைய புதிய நிர்வாக தெரிவும் கல்லூரி சுற்றுமதில் அமைத்தல் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறும்.

தலைவர் / செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
கிளிநொச்சி இந்துக் கல்லூரி

(C-4665)

தொடர்புகளுக்கு : osa.kilinochchihinducollege@gmail.com

## மரண அறிவித்தல்
## செல்வராசா ஸ்ரீநாகேஸ்வரன்
(பிரதி அதிபர் நாவலர் மகா வித்தியாலயம்)



யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சிவலிங்க புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா ஸ்ரீநாகேஸ்வரன் (முன்னாள் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியரும், தற்போது வண்.நாவலர் மகா வித்தியாலய பிரதி அதிபரும்) அவர்கள் கடந்த (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசுந்தரம் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்புமருமகனும் தர்மராணியின் அன்புக்கணவரும் சிவானுஜா, சிவகஜனான், ஜீவசுதன் ஆகியோரின் அன்புத்தந்தையும் மகாலட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியை), கணேசலிங்கம், புவனேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை), குகதாசலிங்கம், காலஞ்சென்றவர்களான கதிர்காமலிங்கம், அரிகரகுமார் மற்றும் சிவகுமார், கருணாகரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், சிவபாதம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சந்திரதேவி, சிவராசா, நீலாம்பிகை காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் சாவித்திரி, ரேனுகாதேவி, நகுலாம்பிகை, கணேசதாஸ், மனோராணி, ஜெயராணி, செல்வராணி ஆகியோரின் மைத்துனரும், சிவநாயகமூர்த்தி (நல்லூர் முன்னாள் வலயக்கல்வி பணிப்பாளர்), தனலட்சுமி (கனடா), ஆகியோரின் அன்பு மருமகனும், பாலசிங்கம், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சண்முகநாதன் - பராசக்தி மற்றும் காலஞ்சென்ற சச்சினானந்தன் மற்றும் அன்னபூரணி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2018) புதன்கிழமை மு.ப. 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(7857)

740, K.K.S. றோட்,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் அத்திபாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும் சைவப் பெருவள்ளலாருமான

## சேர்.பொன்.இராமநாதன்
அவர்களின்

## 88 ஆவது குரு பூசைதின விழா



**12.12.2018 புதன்கிழமை**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(7854)

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம் : பரமேஸ்வராக் கல்லூரி, இயக்குநர் சபை,
ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய பரிபாலனசபை,
இந்துமன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# அரசியல் நெருக்கடிக்கு வெளிப்படையான ஜனநாயக ரீதியிலான உடனடித் தீர்வு

## அமெரிக்கத் தூதுவர் அலைனா வலியுறுத்து

(கண்டி)

**இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிக்கு வெளிப்படையான ஜனநாயக ரீதியிலான தீர்வைக் காணவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ் வலியுறுத்தியுள்ளார்.**



இலங்கையில் தற்போது காணப்படுகின்ற அரசியல் நெருக்கடிகளுக்கு துரித தீர்வை காணலாம் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

தற்போதைய நெருக்கடிக்கு ஜனநாயக ரீதியிலும் வெளிப்படை தன்மையுடனும் தீர்வை காணலாம்.

இலங்கையில் எடுக்கப்பட்டுள்ள சில நடவடிக்கைகள் அரசமைப்பிற்கு முரணானவை என்பது குறித்த சர்ச்சை காணப்படுவது உண்மை, இது எனது அரசாங்கத்தின் கரிசனைக்குரிய விடயமாக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையினதும் இலங்கை மக்களினதும் நட்பு நாடு என்ற அடிப்படையில் நாங்கள் அரசாங்கம் முற்றிலும் சட்டரீதியானதாக காணப்படுவதையும் அரசமைப்பு உட்பட இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள ஜனநாயக கட்டமைப்புக்களை ஜனநாயக நடைமுறைகளை மதிப்பதையும் உறுதி செய்ய விரும்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து இலங்கையர்களினதும் முழுமையான நம்பிக்கையைக் கொண்ட அரசாங்கம் காணப்படுவதையும் உறுதிசெய்ய விரும்புகின்றோம் என அமெரிக்கத் தூதுவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். (இ-4)

---

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ரத்து செய்ய வேண்டும்

## பிமல் ரட்நாயக்க தெரிவிப்பு



(பத்தரமுல்ல)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்வதன் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என ஜே.வி.பி.யின் அரசியல் சபை உறுப்பினர் பிமல் ரட்நாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் அமைந்துள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசியல் அமைப்பை மீறி நீதிமன்றத்தை உதாசீனம் செய்து எதேச்சதிகாரமாக செயற்பட்டு வருகின்றார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையால் அவர் இவ்வாறு செயற்பட்டு வருகின்றார்.

இருபது ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட மைத்திரி நிறைவேற்று அதிகார ஆசனத்தில் அமர்ந்ததன் பின்னர் முழுமையாக மாறிவிட்டார்.

இதுவரையில் ஜனாதிபதிகளாக நியமிக்கப்பட்ட அனைத்து நபர்களும் இவ்வாறான எதேச்சதிகார போக்கில் செயற்பட்டு வருகின்றனர்.

தற்பொழுது நிலவி வரும் அரசியல் குழப்ப நிலைமைகளுக்கு தீர்வு காணப்பட்டதன் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்து 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார். (இ-4)


---

## பிரதமர் பதவியிலிருந்து

# ரணில் நீக்கம் குறித்த மனுக்கள் மீதான பரிசீலனை ஜனவரி 7வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான பரிசீலனை எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதிவரை உயர் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களே அடுத்த வருடம் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி விட்டு மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானம் சட்ட விரோதமானது என தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் இரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

---

# நாமலுக்காக மகிந்த எடுத்த தீர்மானம்

(கொழும்பு)



எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஊடாக ராஜபக்ஷ உறவினர்கள் பலரை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வர மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாமல் ராஜபக்ஷவை பொதுஜன பெரமுனவின் தலைவராக முன்னிறுத்தவும் அதற்குத் தடையாக இருப்பவர்கள் என்று சந்தேகிக்கும் தரப்பை அரசியலில் இருந்து ஓரங்கட்டவும் மகிந்த ராஜபக்ஷ இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மாத்தறை மாவட்டத்தில், மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினரான மகன் முறையான இளைஞர் ஒருவர் ஏற்கனவே தனது தேர்தல் பணிகளை ஆரம்பித்துள்ளார். இவரது வருகைக்கு மாவட்டத்தில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ராஜபக்ஷ குடும்ப ஆதிக்கம் இல்லாத மாத்தறை மாவட்டத்தில், ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த ஒருவர் அரசியலில் ஈடுபட இருப்பது பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (இ-4)

---

# ஜனாதிபதிக்கு மற்றுமொரு சட்டவிரோத ஆலோசனை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை நான்கரை ஆண்டுகளுக்கு முன்னதாக கலைக்கலாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தவறான சட்ட ஆலோசனை வழங்கிய தரப்பினர், அதே போன்று மற்றுமொரு தவறான சட்ட ஆலோசனையை வழங்கியிருப்பதாக தெரிய வருகிறது.

நாடாளுமன்றத்தை கலைத்து வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல், அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டால், உடனடியாக பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என இந்த தரப்பினர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி தேசிய தேவை கருதி சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினால், அதில் கிடைக்கும் முடிவுகளை கட்டாயமாக அமுல்படுத்தும் சட்டரீதியான கடமைப்பாடு ஜனாதிபதிக்கு உள்ளதாக சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.


எனினும் உயர் நீதிமன்றம் சட்டவிரோதம் என அறிவித்தமை தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது முட்டாள்தனமானது எனவும் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ள மக்கள் மத்தியிலான அதிருப்தி இதனால், மேலும் அதிகரிக்கும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி தான் விரும்பியவாறு சர்வஜன வாக்கெடுப்புக்களை நடத்த முடியாது. அமைச்சரவையின் அனுமதியும் அதற்குத் தேவை என சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-4)

---

## நாடாளுமன்றை கூட்டுவதை சவாலுக்குட்படுத்தி

# சபாநாயகருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனு



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரியவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறி உயர் நீதிமன்றத்தில் இந்த அடிப்படை உரிமை மனுவை நேற்றுத் திங்கட்கிழமை காலை தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தை கலைத்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், சபாநாயகர் கரு ஜெயசூரிய நாடாளுமன்றத்தை கூட்டுவதை சவாலுக்கு உட்படுத்தி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளின் பெயர்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. (இ-4)

# அடிலெய்டே 'ஆனந்தமே'

## இந்தியா அமர்க்கள ஆரம்பம்



அரைச்சதமடித்த மந்தனாவின் அதிரடிகளில் ஒன்று...

அடிலெய்ட் டெஸ்டில் அசத்திய இந்திய அணி 31 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன்மூலம் அவுஸ்திரேலிய மண்ணில் முதன்முறையாக டெஸ்ட் தொட்ரை வெற்றியுடன் ஆரம்பித்தது. கடைசி கட்டத்தில் 'டென்ஷன்' கொடுத்த அவுஸ்திரேலிய அணியின் போராட்டம் வீணானது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் அடிலெய்டில் நடந்தது.

முதல் இன்னிங்சில் இந்தியா 250, அவுஸ்திரேலியா 235 ஓட்டங்கள் எடுத்தன. 2ஆவது இன்னிங்சில் இந்திய அணி 307 ஓட்டங் கள் எடுத்தது. பின், 323 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் 2வது இன்னிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி, 4ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய 5ஆம் நாளாட்டத்தில் முன்னணி வீரர்கள் விரைவாக வெளியேறிய போதிலும் இறுதி இலக்க வீரர்கள் கடும் சவாலைக் கொடுத்த போதிலும் இந்தியாவை ஜெயிக்க அவர்களால் முடியவில்லை.

இறுதியில் அவுஸ்திரேலியா அணி 291 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆட்டநாயகன் விருதை இந்தியாவின் புஜாரா கைப்பற்றினார்.

**ஆறாவது வெற்றி**

அடிலெய்ட் டெஸ்டில் வென்ற இந்திய அணி, அவுஸ்திரேலிய மண்ணில் 6ஆவது வெற்றியை பதிவு செய்தது. இதுவரை இங்கு விளையாடிய 45 டெஸ்டில், 6 வெற்றி, 11 'சமன்', 28 தோல்வியை பதிவு செய்துள்ளது இந்தியா.

**15 ஆண்டுகளுக்கு பின்...**

அவுஸ்திரேலியாவை வீழ்த்திய இந்திய அணி, அடிலெய்ட் மைதானத்தில் 15 ஆண்டுகளுக்கு பின் டெஸ்ட் வெற்றியை பதிவு செய்துள்ளது. கடைசியாக 2003ல் இங்கு நடந்த டெஸ்டில் கங்குலி தலைமையிலான இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸியைத் தோற்கடித்தது.

இங்கு, இதுவரை மோதிய 12 டெஸ்டில் அவுஸ்திரேலியா 7 (1948, 67, 78, 92, 99, 2012, 2014), இந்தியா 2 (2003, 2018) போட்டியில் வென்றன.



வெற்றிக் கொண்டாட்டத்தில் மிதக்கும் இந்திய வீரர்கள்

**முதல் போட்டி முதல் வெற்றி**

அவுஸ்தி ரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் வென்ற இந்தியா, அவுஸ்திரேலிய மண்ணில் முதன்முறையாக டெஸ்ட் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது.

அடிலெய்ட் டெஸ்டில் இந்திய அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் இந்திய அணி, முதன்முறையாக அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தது. இதற்கு முன், 11 முறை இங்கு டெஸ்ட் தொட ரில் பங்கேற்ற இந்திய அணியால் ஒரு முறை கூட முதல் போட்டியில் வென்றதில்லை.

மூ தவிர அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்த 2ஆவது ஆசிய அணி என்ற பெருமை பெற்றது இந்தியா. ஏற்கெனவே பாகிஸ்தான் அணி (1978-79, மெல்போர்ன்) இங்கு தொடரை வெற்றியுடன் ஆரம்பித்து இருந்தது.

இதன்மூலம் தென்னாபிரிக்கா (இடம் ஜோகனஸ்பேர்க், 2006-07), இங்கிலாந்து (இடம்: லோர்ட்ஸ், 1986), நியூசிலாந்து (இடம்: டுனிடினில் 1967-68, ஆக்லாந்தில் 1975-76, ஹமில்டனில் 2008-09), அவுஸ்திரேலியா (இடம்: அடிலெய்ட், 2018) மண்ணில் டெஸ்ட் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்த அணி என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைத்தது.

# ஹரிக்கேன்ஸ் வெற்றி

'பிக்பாஷ் லீக் ரி20' போட்டியில் மந்தனா அரைசதம் கடந்து கைகொடுக்க ஹொபர்ட் ஹறிக்கேன்ஸ் அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மெல்போர்ன் ஸ்ரார்ஸ் அணியை வீழ்த்தியது.

அவுஸ்திரேலியாவில், பெண்களுக்கான 'பிக்பாஷ் லீக் ரி20' கிரிக்கெட் தொடர் நடக்கிறது. பர்னி நகரில் நடந்த லீக் போட்டியில் ஹோபர்ட் ஹறிகேன்ஸ், மெல்போர்ன் ஸ்ரார்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஹொபர்ட் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை எடுத்தது. மந்தனா (69), ஹேலி மத்யூஸ் (42) கைகொடுத்தனர்.

கடின இலக்கை விரட்டிய மெல்போர்ன் ஸ்ரார்ஸ் அணி 16.5 ஓவர்களில் 124 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. ஏஞ்சலா ரீக்ஸ் (31), அன்னாபெல் சதர்லாந்து (23) ஆறுதல் கொடுத்தனர்.

**சிட்னி வெற்றி**

சிட்னியில் நடந்த மற்றொரு லீக் போட்டியில் சிட்னி தண்டர், பிரிஸ்பேன் ஹீட் அணிகள் மோதின.

சிட்னி அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைக் குவித்தது. ஹர்மன்பிரீத் கவுர் (56) நம்பிக்கை அளித்தார்.

சவாலான இலக்கை விரட்டிய பிரிஸ்பேன் அணி 18.5 ஓவர்களில் 164 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து தோல்வியடைந்தது. கிரேஸ் ஹறிஸ் (54) ஆறுதல் அளித்தார்.

# எலும்பு, நரம்பு, தசை தொடர்பான இலவச மருத்துவ முகாம்



நல்லூர் றோட்டறக்ட் கழகம் மற்றும் விரியும் சிறகுகள் அறக்கொடை நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் விண்மீன்களின் ஒழுங்குபடுத்தலில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அதிசயம் அமைப்பு வழங்கும் எலும்பு, நரம்பு மற்றும் தசை தொடர்பான பிரச்சினைகளிற்குரியதும் அனைத்து வயதினருக்குமான உடல் வலுவூட்டல் இலவச மருத்துவ முகாம் நேற்று முன்தினம் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் உறுப்பினர்கள், விரியும் சிறகுகள் அறக்கொடை நிறுவன உறுப்பினர்கள், விண்மீன்கள் குழுவினர், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அதிசயம் அமைப்பு வைத்தியர்கள் கலந்து கொண்டனர். (ம)






கண்ணீர் அஞ்சலி



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
ஆசிரியை திருமதி அ.றமணிதரன்
அவர்களின் அன்புத் தந்தை

அமரர்
கணபதிப்பிள்ளை
வல்லிபுரம்


அவர்களது பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(C-4665)

### மனிதவுரிமைகள் தினத்தை முன்னிட்டு

# காணி உரிமைகோரி மூதூரில் கவனயீர்ப்பு



(மூதூர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை மூதூர் பிரதேச செயலகத்தின் முன் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றும் மகஜர் கையளிப்பும் இடம்பெற்றது.

மூதூரிலுள்ள சம்பூர் கங்குவேலி படுகாடு காணிகளுக்கான ஆவணங்களை வழங்கக்கோரி குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் ஜனநாயக மக்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகள் அனைத்தையும் உடனடியாக பொது மக்களிடம் கையளிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்களுடைய காணிகளுக்கான ஆவணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இழுத்தடிப்புக்களை நிறுத்தி துரிதமாக காணி ஆவணங்களை வழங்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கோரப்பட்டது.

வன பரிபாலன திணைக்களம் தமது காணிகளுக்குள் எல்லைக்கல் போட்டு தமது காணிகளில் விவசாயம் செய்யவும் தடைசெய்து வருவதாகவும் அதனை விடுவிக்க வேண்டும் எனவும் கோரினர்.

காணி உறுதி வழங்குவதற்கான காணிக்கச்சேரி 5 ஆண்டுகளாக நடத்தப்பட்ட போதும் உறுதிகளை வழங்குவதில் திட்டமிட்டு இழுத்தடிப்பு செய்யப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் 90 வீதமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்ற போதும் தொடர்ந்து காணி விடுவிப்பு கோரி பொது மக்களின் போராட்டங்கள் நடந்த வண்ணமே உள்ளன. எனவே 90 வீதமான காணிகள் விடுவிக்கப் பட்டமைக்கான ஆதாரம் இல்லாமல் உள்ளது எனவும் தெரிவித்தனர்.

மேலும் நல்லாட்சி அரசாங்கம் ஏற்பட்டு மூன்றரை ஆண்டுகளாகியும் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகளான இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவிப்பது மற்றும் காணாமல் போனோர் பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது.

இது தொடர்பாக தமிழ் அரசியல் தலைவர்கள் துரிதமாக செயற்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-4)

# வாள்வெட்டில் குடும்பஸ்தர் படுகாயம்



(சாவகச்சேரி)

தனங்கிளப்பு-தச்சன் தோப்புப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாதவர்களின் வாள்வெட்டிற்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இரவு வேளையில் வீட்டிற்குள் நுழைந்த கும்பல் அங்கிருந்த உடைமைகளைச் சேதப்படுத்தியதுடன் குடும்பஸ்தரையும் வெட்டிக் காயப்படுத்தியுள்ளது.

இதில் தனங்கிளப்பு - தச்சன்தோப்பைச் சேர்ந்த 40வயது குடும்பஸ்தரே காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-30)

### "ஒரு இலட்சம் பலூன்களுடன் பொலிஸார்"

# பண்டிகைக் காலங்களில் மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளைக் கைதுசெய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்குத் தேவையான ஒரு இலட்சம் பரிசோதனை பலூன்கள் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்பு நடவடிக்கை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பண்டிகைக் காலப் பகுதியில் கொழும்பு மற்றும் அதனை சூழவுள்ள பகுதியில் மேலதிகமாக 1000 பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மேலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தும் வகையில் வீதியின் இரு பக்கங்களிலும் வாகனங்களை நிறுத்தி வைப்பவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-4)

# மைத்திரியை ஓடஓட விரட்டியடிக்கும் காலம் நெருங்கி விட்டது என்கிறார் சரத்



(கொழும்பு)

பைத்தியக்காரனை பைத்தியக்காரன் என்றுதான் நாம் சொல்ல முடியும். அவ்வாறு சொல்வதில் எந்தத் தவறும் இல்லை என ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பைத்தியக்கார நிலைமைக்குப் போய் விட்டார் என்பதை நினைத்து, அவருக்கு வாக்களித்த மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். மக்கள் இன்று கடும் கொதிப்பில் இருக்கின்றார்கள். அவர்களே, மைத்திரிபாலவை ஓட ஓட விரட்டியடிக்கும் காலம் நெருங்கி விட்டது எனத் தெரிவித்தார்.

பொது வெளியிலும், நாட்டின் அதியுயர் சபையான நாடாளுமன்றத்திலும் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மனநோயாளி என்றும், அவர் ஒரு பைத்தியக்காரன் என்றும் கூறியுள்ளீர்களே! இது சரியா?' என்று வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றின் இலங்கை செய்தியாளர் சரத் பொன்சேகாவிடம் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வாதிகாரி. இதை அவர் இன்று வெளிப்படையாகவே நிரூபித்துக் காட்டுகின்றார். அவரின் அராஜகச் செயல்கள் விரைவில் அடங்கும். அவர் அண்மையில் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களிடம் கூறியது போன்று தனது ஜனாதிபதி பதவியைத் துறந்துவிட்டு சொந்த ஊரான பொலநறுவைக்குச் சென்று விவசாயம் செய்வதே பொருத்தமானதாக இருக்கும். அந்த நிலைமையே அவர் இன்று உருவாக்கியுள்ளார். அவருக்கு மன்னிப்பு வழங்க நாமும் நாட்டு மக்களும் தயாராக இல்லை எனத் தெரிவித்தார். (இ-4)

## இராசி பலன்

**மீனம்:** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**மிதுனம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** தொழிலில் சில மாற்றங்கள் செய்வது பற்றி சிந்திப்பீர்கள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

இராசி பலன்

கிரகநிலை: செவ் | ராகு | கேது, சந் | சனி | சூரி, குரு, புத | சுக்

சந்திராஷ்டமம்: திருவாதிரை, பூசம்

**11.12.2018**

கார்த்திகை 25, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு

சதுர்த்தி முன்னிரவு 7.39 மணிவரை

உத்தராடம் பிற்பகல் 1.22 மணிவரை

சுபநேரம் 10.49-12.19 மணிவரை

இராகுகாலம் 3.19-4.49 மணிவரை

சதுர்த்தி விரதம்

வளவன்

**கடகம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்:** நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


**சிம்மம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், உடல் நலம் சீராகும், கௌரவமான நாள்.

**தனுசு:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வேலைச்சுமை கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்க்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கூடும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், சேமிப்புக்கள் உயரும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.



மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச்சங்க புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்து கொண்டார்.

# பிளாஸ்ரிக் கழிவுகள் கடலுக்குள் செல்லாமல் தடுத்தல்



(பொலிகண்டி)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் (VOGT) ''பிளாஸ்ரிக் கழிவுகள் கடலுக்குள் செல்லாமல் தடுத்தல்'' என்ற தொனிப்பொருளில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டத்தில் கடந்த 6 ஆம் திகதி பொலிகண்டி மத்தி கடற்கரை சுத்தமாக்கப் பட்டது.

இதில் கிராம மக்கள், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

பொலிகண்டி மத்தி மக்களுக்கு பொலித்தீன், பிளாஸ்ரிக் சூழலுக்கும் கடலுக்கும் செல்வதால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிய விழிப்புணர்வுக் கூட்டம் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் நடத்தப்பட்ட பின்னரே கடற்கரை சுத்தமாக்கல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-4)

யாழ்.செய்திகள்

# அறிக்கையில் பாகுபாடு ஏன்? நகரசபை உறுப்பினர் கேள்வி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் இடம்பெறும் விடயங்கள் அறிக்கையாக வெளிவரும் போது அதில் பாகுபாடு காட்டப்படுகிறதா? என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நடனதேவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற சபை அமர்வில் உறுப்பினர்களுக்குவழங்கியசென்ற கூட்ட அறிக்கையில்சிலஉறுப்பினர்களின்உரையில்பெரும்பாலான விடயங்கள் உள்ளடக்காமையால் அவர் இவ்வாறுகேள்விஎழுப்பியுள்ளார்.

சபையில்ஒவ்வொருஉறுப்பினரும் தெரிவிக்கும் பிரச்சினைகள் கட்டாயம் அறிக்கையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட ஒருசில உறுப்பினர்களின் உரைகள், விடயங்கள்மாத்திரமே அறிக்கையில் இடம்பிடிக்கின்றன.

ஏனையவர்களுடையகருத்துக்கள் உள்ளடக்கப்படுவதில்லை. ஒரு உறுப்பினர் தெரிவிக்கும்விடயங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்படாது விட்டால் அறிக்கை அடித்து சபையில் கொடுப்பதில் எந்தப்பயனும்இல்லை. அதனை விட விரைவில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனி ஒலிவாங்கிமேசையில்பொருத்தப்பட வேண்டும்.

ஒலிவாங்கி ஊடாக உறுப்பினர்கள் கதைக்கும் விடயத்தைப்பதிவுசெய்துஅதனை அறிக்கையாக வெளியிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். சாவகச்சேரி நகரசபையின் கூட்ட அறிக்கை நகர சபையின் நூலகங்களில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான பரிவாரத் திருக்கோவில்களில் ஒன்றான ஐயனார் கோவில் மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை7.57 மணிமுதல் 8.37 மணிவரை நடைபெறவுள்ளது.

இதற்கு முன்தினமான 13 ஆம் திகதி வியாழக்கி-ழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும். (இ-5)

# சண்டிலிப்பாய் கோட்டத்திற்கு புதிய பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு விக்னேஸ்வர வித்தியாலய அதிபராகப் பணியாற்றும் பஞ்சாட்சரம் கணேசன் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெறுகிறார்.

அதிபர் சேவை தரம் 01 உத்தியோகத்தராகிய இவர் அண்மையில் வடமாகாணக் கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றில் சித்தி பெற்று சண்டிலிப்பாய் கோட்டகல்விப் பணிப்பாளராக நியமனம் பெறுகிறார். (இ-4)

# துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பன்னாலை சேர்.அ.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்துகொண்ட வலி.வடக்கு சுதந்திரக் கட்சி பிரதேசசபை உறுப்பினர் ஆசிரியர் ஆதவனால் மூன்று மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. (இ-5)

# தேசிய வீடமைப்பு அதிகார சபையால் யாழில் 1,345 வீடுகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 8 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 55 இடங்களில் 1,345 வீடுகள் வழங்கப்பட்டு வருவதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் ஒதுக்கப்பட்ட ரூபாய் ஐந்து இலட்சம் பெறுமதியான வீட்டுத்திட்டங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் 7 இடங்களில் 149 வீட்டுத் திட்டங்களும் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் ஒரு இடத்தில் 10 வீட்டுத் திட்டங்களும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 11 இடங்களில் 284 வீட்டுத்திட்டங்களும் சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் 17 இடங்களில் 424 வீட்டுத் திட்டங்களும் உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் 3 இடங்களில் 82 வீட்டுத் திட்டங்களும் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 13 இடங்களில் 346 வீட்டுத் திட்டங்களும் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் 2 இடங்களில் 25 வீட்டுத் திட்டங்களும் கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் ஒரு இடத்தில் 25 வீட்டுத் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ

# சாதனையாளர் கௌரவிப்பு முதலாம் அமர்வு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தால் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வுகளின் முதலாம் அமர்வானது 2018.12.14 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியென மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வமர்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் 85% இற்கு மேற்பட்ட பிள்ளைகளைச் சித்தியடைய வைத்த பாடசாலைகளின் அதிபர், தரம் 5 கற்பித்த ஆசிரியர்கள், 2018 ஆம் ஆண்டு வடமாகாண நல்லாசிரியர் விருது, 2017, 2018 ஆம் ஆண்டு பாடசாலைகளின் பண்புத்தரச்சுட்டி அடிப்படையில் ஒவ்வொரு வகையிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற பாடசாலைகள் மற்றும் பாடசாலைச் சுகாதாரம் ஆகிய துறை சார்ந்த 658 பேர் கௌரவிக்கப் படவுள்ளனர். ஏனைய அமர்வுகள் முன்னர் அறிவிக்கப் பட்டபடி டிசெம்பர் 15, 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறும் என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ

# "மாணவர்களின் கலை அரங்கம்"

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலை இலக்கியப் பெருவிழாவின் 8 ஆம் நாள் நிகழ்வான "மாணவர்களின் கலை அரங்கம்" நாளை 12 ஆம்திகதிபுதன்கிழமைகாலை 9 மணியளவில் திக்கம் கலாசார மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.ரவிகரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராகத் தெல்லிப்பழை துர்க்கை அம்மன்தேவஸ்தானத் தலைவரும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன், சிறப்பு விருந்தினராக வடமராட்சிவலயக்கல்விஓய்வுநிலைப் பணிப்பாளர் சி.நந்தகுமார், கௌரவ விருந்தினர்களாக கலாபூஷணம் இ.பாலசுப்பிரமணியம், கலாபூஸ்ரீஷணம் நாடகச்சிகரம் வெ.முத்துச்சாமி, கலைஞர் செ.யோகராஜா ஆகியோர்கலந்து கொள்வர். (இ

# வீதிகளுக்குப் பெயர்ப்பலகை




(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினரும் சுதந்திரக்கட்சி வட்டாரப் பிரதிநிதியுமான பூலோகம் பிரணவனின் வேண்டுகோளுக்கிணங்க அன்ரா (ANDRA) நிறுவனத்தின் அனுசரணையுடன் வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட காங்கேசன்துறை வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள வீதிகளுக்கு மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பெயர்ப் பலகை கடந்த வாரம் நாட்டப்பட்டன. (இ-5)

### மகிந்த தரப்புடன் முற்றுகிறது முரண்பாடு

# எவருடன் கூட்டணி அமைத்தாலும் ஜனாதிபதி மைத்திரியே தலைவர்

## சு.க.செயலாளர் பியதாஸ திட்டவட்டம்



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து கூட்டணி அமைத்தால் தலைமைத்துவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையே சாரும் எனத் தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ, பொதுஜன பெரமுன அதனை விரும்பாவிடின் உத்தேச கூட்டணியிலிருந்து விலகிக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன இணைந்து அமைக்க உத்தேசித்துள்ள கூட்டணி தொடர்பில் இரு தரப்பினராலும் மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில். அது தொடர்பில் சுதந்திர கட்சியின் நிலைப்பாட்டினை வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட தீர்மானித்ததன் அடிப்படையிலேயே அவரை பிரதமராக நியமித்தார். நாட்டில் சகல அதிகாரங்களும் மிக்கவராக ஜனாதிபதி காணப்படுகின்றார். எனவே இந்த புதிய கூட்டணியின் தலைமைத்துவத்தை அவரால் மாத்திரமே வகிக்க முடியும் எனவும் பியதாஸ தெரிவித்தார்.(இ-4)

## மனிதவுரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபவனி




(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் ஆலய முன்றலிலிருந்து மனித உரிமையை பிரகடனப்படுத்தும் பதாகைகளை தாங்கியவாறு ஊர்வலகமாக துர்க்காதேவி மண்டபம் வரை இந்த நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

அதன் பின்னர் யாழ். மனித உரிமைகள் முதலுதவிச் சங்கம் மற்றும் இலங்கை சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மனித உரிமைகள் தின நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், யாழ்.பிராந்திய மனித உரிமை ஆணைக்குழு ஆணையாளர் ரி.கனகராஜ், பேராசிரியர் ம.பெ. மூக்கையா, பொலிஸ் அத்தியட்சகர் பி.யு.உடுகம, இலங்கை அகதிகள் மறுவாழ்வுக்கழகத் தலைவி சி.சூரியகுமாரி ஆகியோர் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். (இ-4)

## காயமடைந்த சிறுமி கண்டிக்கு மாற்றம்


லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரகந்த பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த சிறுமி கண்டி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அக்கரகந்த பகுதியில் டயகம-தலவாக்கலை பிரதான வீதியில் வீட்டுக்குச் செல்வதற்காக வீதியை கடக்க முயன்ற 7 வயது சிறுமி மீது டயகம பகுதியில் இருந்து தலவாக்கலை நோக்கி வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதனால் படுகாயமடைந்த சிறுமி லிந்துலை வைத்திய்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-4)

## விதிமுறைகளை மீறிய உணவகத்தை தொடர்ந்து மூட நீதிமன்று உத்தரவு

அண்மையில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத 4 உணவகங்கள் மீது யாழ். மாவட்ட மருந்து, உணவுப் பரிசோதகர் மற்றும் நகர சபையின் சுகாதாரப் பரிசோதகரினால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதில் மூன்று உணவகங்கள் தமது தவறுகளைச் சீர் செய்துள்ள நிலையில் ஒரு உணவகம் மாத்திரம் தொடர்ந்தும் உரிய வேலைகளைச் செய்யவில்லை என சுகாதாரப் பரிசோதகரினால் அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு தொடர்ந்தும் மூட உத்தரவிட்டதுடன் எதிர்வரும் 18ஆம் திகதி வரை வழக்கு நேற்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை டெங்கு பரவும் சூழலைக் கொண்டுள்ள பழைய இரும்பு கொள்வனவு நிலைய உரிமையாளர் ஒருவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## கிராம உத்தியோகத்தரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்



யாழ். உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/208 புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம உத்தியோகத்தரை திடீரென இடமாற்றம் செய்ததை எதிர்த்து பிரதேச மக்களால் நேற்றுக் காலை 9 மணியளவில் உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், 30 வருட யுத்தத்திற்கு பின்னர் தமது சொந்த இடங்களில் குடியேறிய நிலையில் தமக்கு தேவையான வீட்டுத்திட்டங்கள், ஏனைய வாழ்வாதார உதவிகள் கிடைத்து வரும் நிலையில் தமது கிராம உத்தியோகத்தரை முன்னறிவித்தல் ஏதும் இன்றி திடீரென இடமாற்றம் செய்தமை தமக்கு கிடைக்கப் பெறுகின்ற உதவித் திட்டங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

உடுவில் பிரதேச செயலக பிரிவில் வேறெந்த கிராம உத்தியோகத்தருக்கும் இடமாற்றம் வழங்கப்படாத நிலையில் தமது ஜே/ 208 பிரிவு கிராம உத்தியோகத்தரை இடமாற்றம் செய்தமைக்கு காரணம் என்ன? எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமது கிராம உத்தியோகத்தரின் இடமாற்றம் தொடர்பில் அரசியல் கட்சி ஒன்றின் தலையீடு காணப்படுவதாகவும் இதற்கு பிரதேச செயலாளர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கருத்துத் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக உடுவில் பிரதேச செயலாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்த கிராம உத்தியோகத்தரின் நிர்வாக செயற்பாட்டின் அடிப்படையிலேயே இடமாற்றம் வழங்கப்பட்டதாகவும் பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைய கிராம மக்களின் உதவித் திட்டங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு ஜனவரி மாதம் வரை இடமாற்றம் செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தரை மீண்டும் அதே கிராமத்திற்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வதாக உறுதியளித்தார். (இ)

## அட்டாளைச்சேனை பிரதேச சபை வரவு-செலவுத் திட்டம் தோல்வி

### தவிசாளர் அங்கீகரிப்பு

(அட்டாளைச்சேனை)

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் தோல்வியடைந்துள்ளது.

பிரதேச சபைக் கூட்ட மண்டபத்தில் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா தலைமையில் நேற்று இடம்பெற்ற விசேட அமர்வின் போது, தவிசாளரால் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ் வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் சபையில் இடம்பெற்றதனைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நடைபெற்றது. 18 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையில் ஒரு உறுப்பினர் சபைக்கு சமூகமளிக்கவில்லை.

தவிசாளர் சார்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு எட்டு உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். தேசிய காங்கிரஸ் கட்சி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் இணைந்து ஒன்பது வாக்குகளை இவ்வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக அளித்தனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர் இச்சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவில்லை.

இச்சபை ஆட்சி அமைக்கப்பட்டபோது ஆளும் தரப்பான தவிசாளர் தலைமையிலான குழுவிற்கு ஆதரவளித்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் இருந்த ஒரு உறுப்பினர் இதன்போது பிரதித் தவிசாளர் சார்பாக எதிர்த்து வாக்களித்தமையால் இவ்வரவு-செலவுத்திட்டம் தோல்வி கண்டது.எனினும் எதிர்வரும் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் வாக்கெடுப்பின் மூலம் தோல்வியுறச் செய்யப்பட்ட போதிலும் தவிசாளர் தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி வரவு-செலவுத் திட்டத்தினை அங்கீகரித்துள்ளதாக இதன்போது சபையில் தெரிவித்தார். (இ-4)

## சர்வதேச மனித உரிமைகள் தினத்தில்

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் முல்லைத்தீவில் நேற்று கவனயீர்ப்பு

## ஐ.நாவிற்கு மகஜர்கள் கையளிப்பு







(பனிக்கன்குளம்)

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஒன்று திரண்டு மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முல்லைத்தீவில் முன்னெடுத்திருந்தனர்.

இந்தக்கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவிலுள்ள இராயப்பர் தேவாலய முன்றலில் இருந்து ஆரம்பமாகி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக சென்றடைந்து மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது உறவினர்கள் தமது பிள்ளைகளை தேடி கடந்த வருடம் மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று 643 ஆவது நாளாகவும் முல்லைத்தீவில் தொடர்கிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொண்டுவரும் வேளையில் சர்வதேச மனித உரிமைகள் நாளான நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒன்று திரண்டு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளார்கள்.

இதன்போது "வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், சர்வதேசமே பதில்கூறு, சிறைகளில் வாடும் எமது உறவுகளுக்கு நீதிவேண்டும், சர்வதேசமே திரும்பிப்பார், ஆட்சிக்கு அடிபடும் அரசு எமக்கு என்ன பதில் கூறும்"என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பி காணா மலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஐக்கியநாடுகள் சபையின் அலுவலகத்திற்கான மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

இந்த மகஜரை முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்க தலைவி ம.ஈஸ்வரி, வடக்கு-கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி யோ.கலாரஞ்சினியிடம் கையளித்துள்ளார். கலாரஞ்சினி ஐ.நா அலுவலகத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். (2-281)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் தேங்காய் உடைத்து வழிபாடு





(குருமன்காடு)

வவுனியாவில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மனித உரிமைகள் தினமான நேற்று விசேட பூசை வழிபாட்டில் ஈடுபட்டதுடன், கவனயீர்ப்பு ஊர்வலம் ஒன்றினையும் 658 ஆவது நாளில் முன்னெடுத்திருந்தனர்.


நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் பேரணியாக குடியிருப்பு பாடசாலை வீதி வழியாக வைத்தியசாலை சந்திக்குச் சென்று தமது போராட்ட களத்தை வந்தடைந்தனர்.

இதன்போது. "சர்வதேச மனித உரிமைகள் தினம் வடகிழக்கில் தமிழர் தீர்வு பற்றிய வாக்கெடுப்பு நடத்த ஐ.நாவின் உதவியை நாடுகின்றோம். ஜனநாயகத்தை ஊக்குவிப்பதற்கான வாக்கெடுப்பு" எனப் பொறிக்கப்பட்ட பதாகையுடன் வவுனியாவில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சங்கத்தின்உறவுகள் இன்றைய போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் பெருமளவான தாய்மார்கள் கலந்து கொண்டதுடன் குடியிருப்பு பிள்ளையார் ஆலய வழிபாடுகளின் பின்னர் தேங்காய் உடைத்துவழிபட்டனர்.(2-250)

# பெயர் பொறிக்கப்பட்ட நினைவுக்கல்லை மீளவும் அதே இடத்தில் நிறுவுக!

## பொறியியலாளருக்கு வடக்கு ஆளுநர் பணிப்பு




(பரந்தன்)

கிளிநொச்சி இரணை மடு குளத்தில் 1954ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நினைவு கல்லை மீளவும் அதே இடத்தில் நிறுவுமாறு இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ். சுதாகரனுக்கு வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே பணித்துள்ளார்.

இரணைமடு புனரமைக்கப்பட்டு 1954ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க மற்றும் டட்லி சேனநாயக்க ஆகியோரின் பெயர் பதிக்கப்பட்ட நினைவுக்கல் நிறுவப்பட்டிருந்தது.

இரணைமடு குளத்தின் அபிவிருத்தி பணிகள் இடம்பெற்றிருந்த வேளை அதன் நிறைவுக்காக குளத்தின் சுற்றுவட்டம் அழகுபடுத்தும் பணிகள் இடம்பெற்று வந்தன. இந்த நிலையில் குறித்த நினைவுக்கல் அமைந்திருந்த பகுதியும் அகற்றப்பட்டு அந்த பகுதியில் சுற்றுவட்டம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

சுற்றுவட்டம் அமைந்திருந்த பகுதியில் குறித்த நினைவுக்கல்லையும்.புதிய நினைவு கல்லையும் அமைப்பதற்கான பணிகள் இடம்பெற்று வந்த நிலையில், ஜனாதிபதியினால் குறித்த குளம் விவசாயிகளிடம் கையளிக்க மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கை காரணமாக உடனடியாக குறித்த நினைவு கல்லை அப்பகுதியில் பொருத்த முடியாது போனதாகவும், தற்போது குறித்த கல்லை ஏற்கனவே அமைந்திருந்த பகுதியில் வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் நீர்ப்பாசன திணைக்களம் தெரிவிக்கிக்கின்றது.

இதன் பணிகளை நாளை புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நேரடியாக விஜயம் செய்து பார்வையிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (2-312-60)




## 49 தென்னங்கன்றுகள்

# பூதன்வயல் கிராமத்தில் அழிப்பு

## யானைகள் அட்டகாசம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த சில நாட்களாக மக்கள் வாழ் இடங்களுக்குள் நுழையும் காட்டு யானை ஒன்று தென்னந்தோட்டங்களுக்குள் நுழைந்து வளர்ந்து வரும் காய்க்கும் தென்னங்கன்றுகளை அழித் தும் தென்னம்பிள்ளையை வீழ்த்தி குருத்தைஅழித்தும்வருகின்றன. 49 தென்னங்கன்றுகள் அழித்துள்ளதாக காணி உரிமையாளர் ஒருவர் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் பொலிஸாரிடம் சென்று முறையிட்டும் அவர்கள் வனஜீவராசிகள் திணைக்களத்திடம் முறையிட சொல்லியுள்ளார்கள்.

அவர்களிடம் முறையிட்டு அவர்கள் பத்து வெடிகளை கொடுத்துள்ளார்கள் யானை வந்தால் கொளுத்திப்போடுமாறு.

மதவாளசிங்கன் காட்டுப் பகுதியில் நிலைகொண்டுள்ள யானை ஒன்று கடந்த நாட்களாக பூதன் வயல் கிராமத்தில் உள்ள தென்னங் கன்றுகளை அழித்து வருகின்றது.

காட்டுயானையின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள மின்சார வேலி அமைத்து தரவேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.(2-315)

# சர்வதேச மனித உரிமைகள் தினம் மன்னாரில் அனுஷ்டிப்பு

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(மன்னார்)

மன்னார் மாவட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களை மேம்படுத்தும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினம் மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் நகர மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் அருட்தந்தை நேரு அடிகளார்.அகில இலங்கை தமிழ் காங்கிரசின் செயலாளர் செல்வராசா கஜன், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன், சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது காணாமலாக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவுகள், தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள்.மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-285)

## குளங்களைப் பார்வையிடச் செல்வோர்
# பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி உயிராபத்தை தவிர்த்துக் கொள்ளவும் பொலிஸார் எச்சரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளம் உள்ளிட்ட பாரிய மற்றும் நடுத்தர சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் நிரம்பியுள்ளதனால் இவ்வாறான குளங்களைப் பார்வையிடுவதற்குச்செல்வோர் உரிய பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி உயிராபத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீரப்பாசனக்குளமான இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 36அடியாக உயர்வடைந்து மேலதிக நீர் வான்கதவுகளால் வெளியேற்றப்படுகின்றது.

இந்த நிலையில் குளங்களைப் பார்வையிடவருவோர் பாதுகாப்பற்ற இப்பகுதிகளில் நீராடுதல்,மீன்பிடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ளவும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து குளத்திதைப் பார்வையிடுவதற்குச் சென்ற சாவகச்சேரியைச் சேர்ந்த மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்துக்குளங்களும் நீர் நீரம்பிக்காணப்படுவதுடன், வான்பாய்கின்றன.


இவ்வாறு இரணைமடுக்குளம் உள்ளிட்ட குளங்களை பார்வையிடுவதற்கு செல்வோர் அவதானமாகச் செயற்படுமாறும் குளத்தின் ஆபத்தான பகுதிகளைத் தவிர்த்து உயிரிழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(2-315)




## எங்களையும் மகிழ்வுடன் பணியாற்ற வழிவிடுங்கள்
# பால்நிலை வன்முறைக்கு எதிரான கருத்தமர்வு

(குருமன்காடு)

"எங்களையும் மகிழ்வுடன் பணியாற்ற வழிவிடுங்கள்" எனும் தொனிப்பொருளில் பால்நிலை வன்முறைக்கு எதிரான கருத்தமர்வு வவுனியாவில் இடம்பெற்றது.




யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாட்டின் ஒரு அங்கமாக இக் கருத்தமர்வு வவுனியா மாவட்ட செயலகத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சமூக மட்டத்திலும், வேலைத் தளங்களிலும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், பால்நிலை வன்முறைகளை தடுக்கும் வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இதன்போது சட்டத்தரணி கம்ஷா மதுராகன் பால்நிலை வன்முறைக்கு எதிரான நகர்வுகள் குறித்து கருத்துரைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் எஸ். சுகிர்தராஜ், யு.என்.எச்.சி. ஆர். நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் எஸ்.மாதவன் மற்றும் கிராம மட்ட பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண் பொலிஸார், தாதியர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(2-250)

# 'முல்லைத்தீவு கோட்டையை' அடையாளப்படுத்தும் நடவடிக்கையில் தொல்பொருள் திணைக்களத்தினர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் வளாகத்திற்குள் காணப்படும்"முல்லைத்தீவு கோட்டை" என்ற புராதான சின்னத்தை அடையாளப்படுத்தும் நடவடிக்கையில் தொல்பொருள் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளார்கள்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தை சாதகமாக பயன்படுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தினர், வன ஜீவராசிகள் திணைக்களத்தினர்,வன இலாகா திணைக்களத்தினர் ஆகியோர் தங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சின்னமாக காணப்படும் ஆங்கிலேயர்களின் முல்லைத்தீவு கோட்டையை துப்புரவு செய்து அதனை அடையாளப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

குறித்த கட்டடத்தைப் பாதுகாக்கும் நோக்கில் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (2-281)

# வாழ்வாதாரத்திற்கு மாடுகள்; ஏமாற்றி பணம் அறவீடு

(கண்டாவளை)

கிளிநொச்சியில் பெண் தலைமைத்துவக்குடும்பங்களை இலக்குவைத்து வாழ்வாதாரத்திற்கு மாடுகள் வழங்குவதாக ஏமாற்றி பணம் அறவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பேர், கிளிநொச்சியில் பால்கொள்வனவு செய்யும் இடங்களுக்குச்சென்று பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரங்களைத் திரட்டி அவர்களிடமிருந்து குடும்ப பங்கீட்டு அட்டை, தேசிய ஆள் அடையாள அட்டை, வங்கிக்கணக்கு இலக்கம், கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதம் போன்ற ஆவணங்களைத்திரட்டி அவர்களுக்கு நல்லிணக்க பசு மாடுகளை வழங்குவதாகத் தெரிவித்து அவர்களிடமிருந்து முற்பணங்களையும் பெற்றுச்சென்றிருந்தனர்.

அதாவது, கிளிநொச்சி கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஊரியான், உடுப்பாற்றுக் கண்டல் ஆகிய கிராமங்களில் வசிக்கும் பெண் தலைமைத்துவக்குடும்பம் ஒன்றிடம் ஆவணங்களைப்பெற்று குறித்த பெண்ணைத்தொலைபேசியில் தொடர்பு கொண்டு நுவரெலியாவிலிருந்து மாடுகள் கொண்டுவரப்படுவதாகவும் அதற்கு முற்பணமாக 56 ஆயிரம் ரூபாவை வங்கியில் வைப்பிலிடுமாறு கூறி வங்கிக்கணக்கு இலக்கத்தை அனுப்பியிருந்தனர்.

அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டமையால் குறித்த பெண் குறித்த வங்கிக்கணக்கு இலக்கத்திற்கு 56 ஆயிரம் பணத்தினை வைப்பிலிட்டுள்ளார்.

பணம் வைப்பிலிடப்பட்டதையடுத்து, குறித்த நபரின் தொலைபேசி செயலிழந்துள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் மற்றும் வங்கியிலும் நடந்த சம்பவத்தை தெரியப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த மோசடியில் ஈடுபட்ட பிரதான சூத்திரதாரி இலக்கம் 24, சிவபுரம் வவுனிக்குளம் பிரதேசத்தில் வசிக்கும் வவுனிக்குளம் தபால் நிலைய உத்தியோகத்தர் என கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு மாந்தை கிழக்கு மற்றும் கிளிநொச்சி வட்டக்கச்சி, வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளுக்கும் இவ்வாறு பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு மாடுகள் வழங்குவதாக ஏமாற்றி பல இலட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களால் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

## இன ஐக்கியத்தை வலியுறுத்திய
# சக்கர நாற்காலிப்பயணம் பருத்தித்துறையை இன்று சென்றடையும்



(கிளிநொச்சி)

கடந்த 3ஆம் திகதி மாத்தறை மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட சக்கர நாற்காலி பயணம் நேற்று கிளிநொச்சியிலிருந்து யாழ் நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.

இலங்கையின் தென் எல்லையிலிருந்து பருத்தித்துறை வரை இரு கால்களையும் இழந்த கோப்ரல் பி.கே.கே. கருணாரத்ன ஆரம்பித்த பயணம் நேற்றைய தினம் கொக்காவில் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி நகர் ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி சென்றது.

இதன்போது கிளிநொச்சி நகரில் இவருக்கு பலத்த வரவேற்பளிக்கப்பட்டது. இரு கால்களையும் இழந்த இவர் சக்கர நாற்காலியில் இவ்வாறு பல மைல் தூரம் பயணிக்கின்றமை குறிப்பிடதக்கதாகும்.

சர்வதேச மாற்றுதிறனாளிகள் தினத்தன்று ஆரம்பிக்கப்பட்ட குறித்த பயணம் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பயணம் இன்று பருத்தித்துறையில் நிறைவடைய உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2)

# நரம்பு,எலும்பு தொடர்பான இலவச மருத்துவ முகாம்

(வவுனியா)

விண்மீன்கள்,தமிழ் விருட்சம் இணைந்து அதிசயம் பவுண்டேசனுடன் ஏற்பாடு செய்துள்ள நரம்பு, எலும்பு,தசைக்கான இலவச மருத்துவ முகாம் பிரான்ஸ்சிலிருந்து வருகை தந்துள்ள மருத்துவ குழுவால் வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் (வைரவபுளியங்குளம் கிராம சேவையாளர் அலுவலகம்) நாளை புதன்கிழமை காலை 8.30 மணி முதல் இலவசமாக இடம்பெறும் நரம்பு, எலும்பு சம்பந்தமான பிரச்சினையுள்ள முதியவர்கள் உட்பட அனைவரும் வயது வேறுபாடின்றி கலந்து பயன் பெறலாம் என தமிழ் விருட்சம் மற்றும் விண்மீன்கள் அமைப்பினர் அறிவித்துள்ளனர். (2-29)

# முதியோர் பராமரிப்பு நிலையம் பேசாலையில் இன்று திறக்கப்படும்

(மன்னார்)

மன்னார் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள முதியோர் சங்க பகல் பராமரிப்பு நிலையத் திறப்பு விழா இன்று 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு முன்னாள் பாடசாலை அதிபரும் பேசாலை முதியோர் சங்கத் தலைவருமான கலாபூஷணம் எஸ்.ஏ.மிராண்டா தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு லயனல் பிடெலிஸ் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்து கொண்டு ஆசீர்வதித்து கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

இதில் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.எ. மோகன்ராஸ், மன்னார் மறைமாவட்ட முதியோர் சமாச இயக்குநர் அருட்பணி அல்பன் ராஜசிங்கம் அடிகளார் (அமதி), பேசாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ்.கே.தேவராஜ அடிகளார், மன்னார் பிரதேச செயலாளர் திருமதி க.சிவசம்பு, முன்னாள் மன்னார் பிரதேச செயலாளர் ம.பரமதாஸ் உட்பட பல முக்கியஸ்தர்கள் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச் சங்கத்தில் 387 முதியோர்கள் அங்கத்தவர்களாக இருக்கின்றபோதும் இதில் 81பேர்கள் இறைவனடி சேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-285)

# வீதி மின்விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபையினால் வீதிமின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி கரைச்சி சபைக்குட்பட்ட பிரதேசங்களில் முக்கிய இடங்களில் வீதி விளக்குகளைப் பொருத்துகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து மூன்று இலட்சம் ரூபா செலவில் 55 மின்விளக்குகள் புதுக்காடு, மாயவனூர்,வட்டக்கச்சி, ஆனைவிழுந் தான் ஆகிய இடங்களில் பொருத்தப்படவுள்ளன. இதே வேளை கரைச்சிப்பிரதேச சபையினால் தெரிவு செய்யப்பட்ட பத்து வட்டாரங்களுக்கு 150 மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

அதாவது, கிளிநொச்சி நகரம், பாரதிபுரம்,திருவையாறு, உதயநகர், கனகாம்பிகைக்குளம், தர்மபுரம் , கல்மடுநகர், கண்டாவளை, அக்கராயன், கோணாவில் ஆகிய இடங்களல்இந்த மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# மரம் தறிப்பை கண்காணிப்பதற்கு சென்றவர்களின் உந்துருளி கடத்தல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் குமுழமுனை பிரதேசத்தின் கிழக்குப்பகுதியில் சட்டவிரோதமாக மரம் தறிப்பது தொடர்பில் கண்காணிக்கச் சென்ற வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்களின் உந்துருளி கடத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உந்துருளியியை விட்டுவிட்டு தறிக்கப்பட்ட மரங்களை அடையாளப்படுத்திவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது அவர்களின் உந்துருளி காணாமல் போயுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து வன திணைக்களத்தினரின் உந் துருளி காட்டுக்குள் ஆறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது.

உந்துருளியை மீட்ட பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்கள். (2-281)

### வீட்டுக்குள் வந்த வெங்கிணாந்தி பாம்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வேணாவில் காட்டுப்பகுதியில் இருந்த 8அடி நீளம் கொண்ட வெங்கிணாந்தி பாம்பு ஒன்று அண்மையில் மக்கள் வீடுகளுக்குள் நுழைந்து கொண்டது.

இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு மக்கள் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு சென்ற வனஜீவராசிகள்,திணைக்களத்தின் அதிகாரிகள் குறித்த வெங்கிணாந்தி பாம்பினை பிடித்து வவுனிக்குளம் சரணாலயத்திற்குள் கொண்டு சென்று விட்டுள்ளார்கள். (2-281)

# "நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே தேர்தல் குறித்து தீர்மானிக்க முடியும்"



## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

**நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே ஜனவரி மாதத்தில் எந்தத் தேர்தல் இடம்பெறும் என்பதைத் தீர்மானிக்க முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

அத்துடன் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்துள்ள நிலையில் தற்போது தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகள் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்து வருகின்ற நிலையில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் நிலைப்பாடு குறித்து விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-4)

# கொழும்பில் கொடூரமாக செயற்பட்ட நபரால் பதற்றம்

(கொழும்பு)

கல்கிஸையில் 4 பேர் உயிரிழக்க காரணமாக இருந்த சாரதியை கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றும் போது பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.


குறித்த சாரதியால் கொல்லப்பட்ட நபர்களின் உறவினர்கள் வைத்தியசாலையில் பதற்றம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டதாக வைத்தியசாலை இயக்குநர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரின் கால்களில் பாரிய காயம் ஏற்பட்டிருந்தமையால் அவர் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை எடுத்துச் கொண்டுள்ளார்.

எனினும் அவர் அறைக்கு மாற்றப்பட்டதன் பின்னர் கொஹுவல பொலிஸார் பாதுகாப்பு வழங்க முடியாதென அறிவித்ததன் பின்னர் அந்த நோயாளி மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பிற்காக அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை மேற்கொண்டனர்.

எனினும் உயிரிழந்தவரின் உறவினர்கள் அம்புலன்ஸ் வண்டி அவசர பிரிவிற்கு நெருங்கவிடாமல் பதற்றம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டுள்ளனர். (இ-4)

# மரக்கறிச் சந்தைக்குள் மான் இறைச்சி விற்பனை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி மரக்கறிச் சந்தைக்குள் நேற்றுப் புதன் கிழமை விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை இறைச்சி சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரப் பரிசோதகரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதாரப் பரிசோதகரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் எதிர்வரும் புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் அதன் பின்னர் கைப்பற்றப்பட்ட இறைச்சி அழிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த இறைச்சி மிருக வைத்தியர் ஊடாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது மான் அல்லது மரையினுடைய இறைச்சியாக இருக்கலாம் எனவும், இறைச்சி பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகமான இறைச்சி ஏற்கனவே விற்பனை செய்து முடிந்த நிலையில் 3கிலோ இறைச்சி மாத்திரமே சுகாதாரப் பரிசோதகரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. (இ-30)

# உரிமையையும் அபிவிருத்தியையும் ஒரே பாதையில் கொண்டு செல்ல வேண்டும்

## முன்னாள் பிரதியமைச்சர் மஸ்தான் தெரிவிப்பு



(குருமன்காடு)

உரிமையையும் அபிவிருத்தியையும் ஒரே பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்பதே எங்களது நோக்கம் என முன்னாள் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு பிரதி அமைச்சர் கே.கே. மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியா, பட்டக்காடு விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுவேலி அமைத்தலுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்றத்தில் இருந்த மூன்று வருடத்தில் சில விடயங்களை செய்ய முடியாது இருந்தது. அதற்காக ஜனாதிபதியோடு தொடர்ச்சியாக பேசி எமது மக்களின் தேவைகள் பற்றி எடுத்துரைத்தேன்.

அதனடிப்படையில் வாக்கு வங்கி பாரியளவில் இல்லாவிட்டாலும் சிறு வாக்குகள் மூலம் சுதந்திரக் கட்சியின் ஊடாக நாடாளுமன்றம்சென்ற எனக்கு உடனடியாக அமைச்சுப்பதவி தரவில்லை.

இருந்தாலும் மக்கள் தொடர்பாக அடிக்கடி பேசிய ஆர்வத்தை பார்த்து அதற்கேற்றவாறு உள்ளூராட்சிச் தேர்தலில் எனக்கு பாரியளவு வெற்றி



கிடைத்தது.

பூச்சியத்தில் இருந்து 31 உறுப்பினர்களை வெற்றி கொண்டோம். இதன் மூலம் ஒரு பிரதி அமைச்சை ஜனாதிபதி தந்தார். இந்த ஆட்சியின் ஊடாக பல திட்டங்களைச் செய்வதற்கு முயற்சி எடுத்திருந்தோம்.

ஆனால் பல மாற்றங்கள் பிரச்சினைகள் ஏற்பட்டு நீதிமன்றம் சென்று அமைச்சுக்களை நிறுத்தியமையால் அதைத் தொடர முடியாமல் போனது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-250)

## பதவிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள

# அமைச்சர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை நிறுத்த முடிவு

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட நிர்வாகத்துக்கு வழங்கப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளையும் இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக்காலத் தடையுத்தரவுக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி அமைச்சர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் உள்ளிட்ட அனைத்து கொடுப்பனவுகளும், தனிப்பட்ட நிர்வாகத்தினருக்கு வழங்கப்படும் வேதனமும் நிறுத்தப்பட்டுள்ளன.

இந் நிலையில் அமைச்சர்களின் பதவிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைவாக அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளதாக பிரதமரின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-7)




யாழ்.நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் வருடாந்த அணிவகுப்பு மரியாதை உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி முதித்த பண்டார தலைமையில் நேற்று நடைபெற்றது. காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் சித்தானந்த ஜெயக்கொடி அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு பொலிஸ் வாகன பரிசோதனையையும் பார்வையிட்டார். (படங்கள்:-மகாலிங்கம்)

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்து நாட்டின் அரசியல் குழப்பநிலைக்கு ஜனாதிபதி உடன் தீர்வுகாண வேண்டும்

## ஹற்றனில் நேற்று ஆர்ப்பாட்டம்



(ஹற்றன்)

ஹற்றன் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சியில் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவை தேர்ந்தெடுத்த பொழுது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் முறையை இல்லாதொழித்து சாதாரண ஜனாதிபதியாக மக்களின் நன்மதிப்பைப் பெறுவேன் என்று தெரிவித்த ஜனாதிபதி இன்று அவரின் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

அன்று கூறியதுபோல் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து சாதாரண ஜனாதிபதியாகச்செயற்பட அரசியல் அமைப்பில் மாற்றம் ஒன்று கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தி ஹற்றனில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மலையக இளைஞர் அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அமைதியான முறையில், பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை நாட்டில் அரசியல் நிலைமை ஒரு குழப்பகரமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதனால் பொருளாதாரத்திலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நாட்டில் அமைச்சரவை மற்றும் பிரதமர் இல்லை. எனவே இதற்கு உடனடியாக ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (இ-4)

# பிறந்தநாள் கொண்டாட கேக் வாங்கச் சென்றவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு!

(களுவாஞ்சிகுடி)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்திற்கு- முன்பாகவுள்ள வளைவில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வடிகான் ஒன்றிற்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த இருவர் ஆபத்தான நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிளை செலுத்திச்சென்றவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த மற்றையவர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்துச் சம்பவத்தில் களுதாவளை வன்னியனார் வீதியைச் சேர்ந்த வே.தீசன் (வயது-38) என்பவரே உயிரிழந்துள்ளதுடன் அதே வீதியை சேர்ந்த கு.ஜெகதீஸ்வரன் (வயது-35) என்பவரே படுகாயமடைந்துள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

பிறந்த நாளான நேற்று தீசன் தனது பிறந்த நாளை கொண்டாடுவதற்காக கல்முனைக்கு கேக் வாங்குவதற்காக சென்று திரும்பிய நிலையிலேயே இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

# வீட்டின் உரிமையாளரை தாக்கிவிட்டு தப்பிச்சென்ற கொள்ளைக்கும்பல்

## மோட்டார் சைக்கிள் தீக்கிரை



(அம்பாறை)

அம்பாறை மத்தியமுகாம் பிரதேசத்தில் வீடு ஒன்றில் நள்ளிரவில் இரு மோட்டார் சைக்கிளில் சென்ற 4 பேர் கொண்ட குழுவினர் நித்திரையிலிருந்த ஒருவரை தாக்கி விட்டு அங்கிருந்த மோட்டார் சைக்கிளை தீக்கிரையாக்கி தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக மத்திய முகாம் பொலிஸார் தெரிவித்தனர்.

மத்தியமுகாம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 4 ஆம் வட்டாரத்திலுள்ள வீடு ஒன்றில் சம்பவதினமான நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் இரு மோட்டார் சைக்கிளில் சென்ற 4 பேர் கொண்ட குழுவினர் வீட்டின் முன்பகுதியில் படுத்து உறங்கி கொண்டிருந்த வீட்டின் உரிமையாளரான கா.நடராசா என்பவரை எழுப்பி வெளிநாட்டில் வசித்து வரும் உனது மூன்றாவது மகன் எங்கே? எனக் கேட்டு அவரை தாக்கிவிட்டு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரின் மூத்த மகனின் மோட்டார் சைக்கிளை தீயிட்டு கொளுத்திவிட்டு அந்தக் குழுவினர் தப்பியோடியுள்ளனர்.

இதனையடுத்து அருகிலிருந்தவர்கள் மற்றும் வீட்டில் இருந்தவர்கள் தீப்பற்றி எரிந்த மோட்டார் சைக்கிளை அணைத்ததுடன் தாக்குதலில் காயமடைந்தவரை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

குறித்த சம்பவ இடத்திற்கு அம்பாறை தடயவியல் பகுப்பாய்வுப் பிரிவினர் அழைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த மாதம் 23 ஆம் திகதி அதே குழுவினர் இவ்வாறு மகன் எங்கே என விசாரித்து தாக்கியுள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# மாத்தறையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழப்பு; அறுவர் காயம்



(மாத்தறை)

மாத்தறை-தெனியாய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அறுவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி எல்பிட்டி பிரதேசத்திலிருந்து சுற்றுலா வந்த வான் ஒன்று மாத்தறை தெனியாய பெட்னா பிரதேசத்தில் புருஸ்கல பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த வான் வளைவு ஒன்றில் திருப்ப முற்பட்ட போது வேகக் கட்டுப்பாட்டையிழந்து 300 அடி பள்ளத்தில் விழுந்துள்ளது.

இதன் போது சம்பவ இடத்திலேயே பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு 6 பேர் தெனியாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் 4 பேர் மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை தெனியாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

# பேருவளையில் ஹெரோயின் கடத்தல் பாக்.,மாலைதீவிலிருந்து முன்னெடுக்கப்பட்டது

## விசாரணையின் மூலம் அம்பலம்



(பேருவளை)

பேருவளையில் ஹெரோயின் கைப்பற்றப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய கடத்தல் நடவடிக்கைகள் பாகிஸ்தான் மற்றும் மாலைதீவிலிருந்து முன்னெடுக்கப்பட்டமை விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

பேருவளையில் 231 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தலின் பின்னணியைத்தேடி பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர். இதனடிப்படையிலேயே மேற்கண்ட விடயம் தெரியவந்துள்ளது.


அத்துடன் நாட்டிலிருந்து தப்பிச் சென்ற கடத்தல்காரரால் இந்த போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளதாகவும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஐவர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடத்தல்காரர்களின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளின் போது இடம்பெற்ற தொலைபேசி உரையாடல்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் வங்கிக் கணக்குகளும் பரிசீலிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஹெரோயினை கடத்திச் சென்ற ட்ரோலர் படகின் உரிமையாளர் எதிர்வரும் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து முன்னாள் அமைச்சர் ஐ.தே.கவுக்கு தாவல்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய மாகாண சபையின் முன்னாள் அமைச்சரான திலின தென்னக்கோன் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டுள்ளார். இவர் ஜனக பண்டார தென்னக்கோனின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இணைந்து கொண்டுள்ள திலின தென்னக்கோன்,ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து பெற்றுக்கொண்டார். (இ-7)



# பாரதம்

## இந்திய- ரஷ்ய விமானப்படை கூட்டுப்பயிற்சி ஆரம்பம்



(ஜோத்பூர்)

இந்தியா, ரஷ்யா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில், இரு நாட்டு விமானப் படையினர் பங்கேற்கும் 12 நாட்கள் கூட்டுப் பயிற்சி, ராஜஸ்தான் மாநிலம், ஜோத்பூரில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

'ஏவியேந்திரா' என்ற பெயரில் நடைபெறும் இப்பயிற்சிக்காக, ரஷ்ய விமானப் படையினர் தங்களது நாட்டிலிருந்து எவ்தவித தளபாடங்களையும் கொண்டுவராமல், இந்திய தளபாடங்களையே பயன்படுத்துவார் என்று, இந்திய விமானப் படை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்த அறிக்கையில், "இந்திய விமானப் படையில் பயன்படுத்தப் படும் பெரும்பாலான போர் விமானங்கள், ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை என்பதுடன், இரு நாட்டு விமானப் படைகளும் இணைந்து செயலாற்றுவதில் ஏற்கனவே குறிப்பிடத்தந்த நிலையை எட்டியுள்ளது.

தற்போது நடைபெறவிருக்கும் கூட்டுப் பயிற்சியின் மூலம் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப் படும் என்றும், இப்பயிற்சியின்போது இந்திய விமானப் படை போர் விமானங்களை, இந்திய விமானிகளுடன் இணைந்து ரஷ்ய விமானிகள் இயக்கவுள்ளனர்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் துறையில் இந்தியாவின் முக்கிய கூட்டாளி நாடாக ரஷ்யா திகழ்கின்றது. இத்துறையில் இருதரப்பு உறவுகள் தொடர்ந்து மேம்பட்டு வருகின்றன.

ரஷ்யாவில் கடந்த ஆண்டு ஒக்டோபரில் இந்திய ரஷ்ய பாதுகாப்புப் படைகளின் அதிதீவிர கூட்டுப் பயிற்சி நடைபெற்றது. இதில், இரு நாடுகளின் இராணுவம், கடற்படை, விமானப் படைகள் பங்கேற்றன.

வெளிநாட்டின் முப்படைகளுடன் சேர்ந்து இந்தியா கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றது இதுவே முதல் முறையென்பது குறிப்பிடத்தக்கது. (4)

## தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க மத்திய அமைச்சு அனுமதி



(மதுரை)

மதுரை தோப்பூரில் அமையவுள்ள எய்ம்ஸ் மருத்துவமனைக்கு 1200 கோடி ரூபாய் நிதி ஒப்புதலை மத்திய அமைச்சரவை இன்னும் ஒரு சில நாட்களில் வழங்கவுள்ளது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, பதவியில் இருந்தபோது கடந்த 2014ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தில்,

தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை தொடங்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், குறித்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி தமிழ்நாட்டில் 5 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

மேலும் கடந்த 2015 ஆம் ஆண்டு மத்திய செலவில் தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படுமென்ற அறிவிப்பையடுத்து, மத்திய சுகாதாரத்துறை தலைமையில் தமிழகத்தில் உயர்மட்டக் குழுவினர், குறிப்பிட்ட 5 இடங்களுக்கு சென்று ஆய்வுப் பணிகளை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து எதனையும் நடைமுறைப் படுத்தாமல் மத்திய அரசு இருந்துவந்ததால், எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பது தொடர்பாக நீதிமன்றில் பொதுநல வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த ஜுன் மாதம் 18ஆம் திகதி டில்லியில் மத்திய குழு கூடி மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க அனுமதித்தது.

அதனைத் தொடர்ந்து, தமிழக அரசு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது.

இந்நிலையில், கடந்த வாரம் மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள செலவீன நிதி குழு, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கு நிதி வழங்க அனுமதி வழங்கியது.

மேலும், குறித்த திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை இன்னும் ஒரு சில நாட்களில் 1,200 கோடி ரூபாய் நிதியளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## மாற்று அறுவைச் சிகிச்சை மூலம் மனிதர்களுக்கு பன்றியின் இருதயம்

### விஞ்ஞானிகள் ஆய்வு



(பெர்லின்)

மாற்று அறுவைச்சிகிச்சை மூலம் மனித இருதயத்துக்கு பதிலாக பன்றியின் இருதயத்தை பொருத்தும் ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இருதய நோய்கள் காரணமாக ஏராளமானோர் உயிரிழந்து வருகின்றனர்.

குறிப்பாக மாரடைப்பு மூலம் பலர் மரணம் அடைகின்றனர். மருந்து மாத்திரைகள் மூலம் அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இருந்தாலும் இருதய மாற்று அறுவைச்சிகிச்சையே சிறந்தது என நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஆனால் இருதயம் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான மக்கள் காத்து கிடக்கின்றனர்.

எனவே, மனித இருதயத்துக்கு பதிலாக பன்றியின் இருதயத்தை பொருத்தும் ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஜேர்மனியின் முனிச் லுத்விக் மேக்சி மில்லியன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் இதுகுறித்த ஆய்வில் தீவிரமாக உள்ளனர்.

அவர்கள் பன்றியின் இருதயத்தை எடுத்து வால் இல்லாத 'பபூன்' இனத்தை சேர்ந்த 10 குரங்குகளுக்கு பொருத்தினர். ஆய்வில் 5 குரங்குகள் நீண்டநாட்கள் உயிர் வாழ்ந்தன.

ஒரு குரங்கு 51 நாட்களும், 2 குரங்குகள் 3 மாதங்களும் உயிருடன் இருந்தன. மேலும் 2 குரங்குகள் 6 மாதங்களுக்கு மேலாக உயிர் வாழ்ந்தன.

இது ஒரு நல்ல முன்னேற்றம். இதன்மூலம் மனிதர்களுக்கும் பன்றி இருதயத்தை வெற்றிகரமாக பொருத்தலாம் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த ஆய்வை மேலும் தீவிரப்படுத்தியுள்ளனர். அந்த ஆய்வுக் கட்டுரை 'நேச்சர்' என்ற அறிவியல் இதழில் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (4)

## தொலைத்தொடர்பு

## ஹெலிகொப்டர் மோ

### அரச அதிகாரிகள் ஐவ



(கார்ட்டோம்)

சூடான் நாட்டின் அல் கடாரிப் மாநிலத்தில் தொலைத்தொடர்பு கோபுரம் மீது ஹெலிகொப்டர் மோதிய விபத்தில் அரசு அதிகாரிகள் 5 பேர் உயிரிழந்தனர்

சூடான் நாட்டின் கிழக்கு பகுதி வழியாக நேற்று முன்தினம் அரசு அதிகாரிகளை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர் அல் கடாரிப் மாநிலத்தில் உள்ள வயல்வெளியின் மீது பறந்தபோது அங்கிருந்த ஒரு தொலைத் தொடர்பு கோபுரம் மீது பயங்கரமாக மோதியது.

மோதிய வேகத்தில் அந்த ஹெலிகொப்டர் தீ பிடித்து எரிந்தது. எதியோப்பியா நாட்டின் எல்லையோரத்தில் நடந்த இந்த விபத்தில் அரசு அதிகாரிகள் 5 பேர்

## ஜமால் கஷோக்கி கொ

## துருக்கியின் கோரிக்கைக



(ரியாத்)

சவுதி ஊடகவியலாளர் ஜமால்கஷோக்கியின் கொலையுடன் தொடர்புடையவர்களை ஒப்படைக்குமாறு துருக்கி விடுத்த கோரிக்கையை சவுதி அரேபியா நிராகரித்துள்ளது.

தமது நாட்டு பிரஜைகளை எந்தக் காரணம் கொண்டும் வேறு நாட்டிடம் ஒப்படைக்க மாட்டோம் என சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் அடெல் அல் ஜுபைர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் கொலை தொடர்பாக சவுதியின் முன்னாள் புலனாய்வுத் துறை பிரதானி அஹ்மட் அல் அஸிரி மற்றும் அரச குடும்பத்தின் முன்னாள் ஆலோசகரான சவுட் அல் குவட்டானி உள்ளடங்கலாக 11 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கடந்த புதன் கிழமை குறித்த 11 பேருக்கும் எதிராக துருக்கி நீதிமன்றம் பிடியாணை உத்தரவும் பிறப்பித்தது.

இந்நிலையிலேயே, அவர்களை தமது நாட்டிடம் ஒப்படைக்க வேண்டுமென துருக்கி வலியுறுத்தி வருகின்றது.

எனினும், போதுமான ஆதாரங்களை சமர்ப்பிக்க துருக்கி மறுத்து வருவதாக சவுதி குற்றஞ்சாட்டி வருகின்றது.

அத்தோடு, உரிய ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு துருக்கியிடம் கோரியுள்ளதாகவும், ஆதாரங்களின் அடிப்படையில் சவுதி நீதிமன்றில் அவை விசாரணைக்கு உட்படுத்தப்படும் என்றும் சவுதி தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி துருக்கியின் ஸ்தான்புல்

## கனடாவுக்கு சீனா பகிரங்க எச்சரிக்கை

(பீஜிங்)

ஹுவாய் நிறுவன அதிகாரியை உடனே விடுதலை செய்யாவிட்டால், கடும் விளைவுகளை சந்திக்க வேண்டியது வரும் என கனடாவுக்கு சீனா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவைச் சேர்ந்த பன்னாட்டு தொலைத் தொடர்பு நிறுவனமான ஹுவாய் நிறுவனத்தின் அதிபர் ரென் ஜெங்பெய்யின் மகள் மெங் வான்ஜவ். இவர் அந்த நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி.

கடந்த முதலாம் திகதி கனடாவில் வான்கூவர் நகரில் கைது செய்யப்பட்டார். அமெரிக்காவின் வேண்டுகோளின்பேரில் இந்த நடவடிக்கையை கனடா மேற்கொண்டது. வடகொரியா, ஈரான் மீது அமெரிக்கா விதித்த பொருளாதார தடைகளை, ஹுவாய் நிறுவனம் மீறியதாக எழுந்துள்ள புகாரின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீதான குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றுக்கும் அதிகபட்சம் 30 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளதாம்.

மெங்வான்ஜவ் கைது செய்யப்பட்டிருப்பது மனித உரிமை மீறல் என்று சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

# ...ர்பு கோபுரம் மீது ...் மோதி விபத்து

## ...ஐவர் பலி!



உயிரிழந்ததாகவும், மேலும் சிலர் காயமடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொதுவாக, சூடான் நாட்டில் பயன்பாட்டில் உள்ள விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மிகவும் பழைமையான ரஷ்யா மொடலை சேர்ந்தவையாகும்.

கடந்த செப்டெம்பர் மாதம் இங்குள்ள நைல் நதிக்கு அருகாமையில் இராணுவ விமானம் விபத்துக்குள்ளானதில் இரு விமானிகள் உயிரிழந்தனர்.

தொடர்ந்து, ஒக்டோபர் மாதம் தலைநகர் கார்ட்டோமில் உள்ள விமான நிலையத்தின் ஓடுபாதையில் இரு இராணுவ விமானங்கள் நேருக்குநேர் மோதிய விபத்தில் 8 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# ஆப்கான் இராணுவத் தாக்குதலில் 10 தலிபான் பயங்கரவாதிகள் பலி!



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் முக்கிய தளபதி உட்பட 10 தலிபான் பயங்கரவாதிகள் பலியானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தலிபான் பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதியில் உள்ள பர்யாப் என்ற இடத்தில் தலிபான்களை குறிவைத்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் தலிபான் இயக்கத்தின் முக்கிய தளபதியான மாவ்லாலி நஸ்ரத்துல்லா உட்பட 10 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (4)

# லிபியாவில் பணயக் கைதிகள் 6 பேரை படுகொலை செய்த ஐ.எஸ். பயங்கரவாதிகள்

(டிரிபோலி)

லிபியாவில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கடத்தி பணயக் கைதிகளாக வைத்திருந்த 6 பேரை ஐ.எஸ். பயங்கரவாதிகள் படுகொலை செய்துள்ளனர்.

லிபியாவில் முக்கிய நகரங்களை இணைக்கும் ஜாப்ரா மாவட்டம் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தப் பகுதியை கடந்த ஆண்டு இராணுவம் கைப்பற்றியது. ஐ.எஸ். அமைப்பினர் விரட்டியடிக்கப்பட்டனர். அதன்பின்னர் அந்த பகுதியில் அவ்வப்போது ஐ.எஸ். அமைப்பினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவ்வகையில் கடந்த ஒக்டோபர் மாதம் ஜாப்ரா மாவட்டத்தின் புகா பகுதியில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில் 5 பேர் கொல்லப்பட்டனர். தாக்குதலுக்குப் பிறகு 10 பேரை பயங்கரவாதிகள் சிறைபிடித்துச் சென்றனர். நகரை விட்டு வெளியேறும் முன்பாக பல்வேறு இராணுவ வீரர்களை கொன்றதாகவும் சிலர் கடத்திச் சென்றதாகவும் ஐ.எஸ். தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



இந்நிலையில், கடத்தப்பட்ட 10 பேரில் 6 பேரை பயங்கரவாதிகள் படுகொலை செய்துள்ளனர். இதனை மாவட்ட அதிகாரி உறுதி செய்துள்ளனர்.

ஐ.எஸ். அமைப்பிடம் உள்ள பணயக் கைதிகள் மற்றும் இராணுவத்திடம் உள்ள பயங்கரவாதிகளை பரஸ்பரம் பரிமாற்றம் செய்வது தொடர்பாக மூத்த தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் மாவட்ட அதிகாரி தெரிவித்தார். (4)

# ...கொலை விவகாரம் ...கையை நிராகரித்த சவுதி



லியுள்ள சவுதி தூதரகத்திற்குச் சென்றிருந்த ஜமால் கஷோக்கி காணாமல் போனார். பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், சவுதியிலிருந்து சென்ற தேர்ச்சிபெற்ற குழுவொன்றினால் அவர் கொலைசெய்யப்பட்டு அவரது உடல் தடயமின்றி அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது 11 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதோடு, அவர்களில் ஐவர் மரண தண்டனையை எதிர்கொள்ளலாமென கடந்த வாரம் சவுதி அரச சட்டத்தரணி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

இந்த நிலையில் வான்கூவர் நீதிமன்றில் மெங்வான்ஜவ், கடந்த வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டார். அவர் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படுவது தொடர்பாக 6 மணி நேரம் விசாரணை நடைபெற்றது.

மெங்வான்ஜவ் சார்பில் தாக்கலான பிணை மனுவும் விசாரணைக்கு வந்துள்ளது.

இந்த 2 விவகாரங்களினும் நேற்று திங்கட்கிழமை தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டது.

இந்த நிலையில் மெங்வான் ஜவ்வை விடுதலை செய்ய வேண்டும் என்று கனடாவை சீனா நிர்ப்பந்தம் செய்துள்ளது. மேலும் இது தொடர்பாக அந்த நாட்டுக்கு சீனா பகிரங்க எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

இது தொடர்பாக சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சகம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், "மெங்வான்ஜவ்வை விடுதலை செய்ய வேண்டும் என்று பீஜிங்கில் உள்ள கனடா தூதருக்கு வெளியுறவுத்துறை துணை அமைச்சர் லீ யுசெங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விவகாரத்தில் சீனாவின் எதிர்ப்பை பதிவு செய்வதற்கு அவர் வரவழைக்கப்பட்டுள்ளார்" எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "மெங்வான் ஜவ்வை உடனடியாக விடுதலை செய்யாவிட்டால், கடும் விளைவுகளை சந்திக்க வேண்டியது வரும்" எனவும் கனடாவுக்கு பகிரங்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


அத்துடன், " அமெரிக்கா சொன்னதற்காக, மெங்வான்ஜவ் கைது செய்யப்பட்டது, அவரது சட்டபூர்வ உரிமைகளை மீறிய நடவடிக்கை ஆகும். இது சட்டத்தை புறக்கணித்த செயல். அர்த்தமற்றது.

கைது செய்யப்பட்டுள்ளவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அவரது சட்டபூர்வ உரிமைகளை பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால், கடும் விளைவுகளுக்கு கனடா பொறுப்பேற்க வேண்டியது வரும்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே இந்த விவகாரத்தில் சீனாவின் நடவடிக்கை என்னவாக இருக்கும் என்ற வகையில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், "சீனாவுடன் எங்களுக்கு நல்லுறவு உள்ளது" என்று தெரிவித்துள்ளார். (4)

# ட்ரம்புடன் கருத்து வேறுபாடு பதவி விலகும் ஜான் கெல்லி



(வோஷிங்டன்)

வெள்ளை மாளிகையில் ட்ரம்ப்பின் நிர்வாக தலைவராக இருக்கும் ஜான் கெல்லி, ட்ரம்ப் உடனான கருத்து வேறுபாட்டால் பதவி விலகுவதாக தகவல் வெளியான நிலையில், ஜனாதிபதி ட்ரம்ப் அதனை உறுதி செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ட்ரம்ப்பின் நிர்வாக பணியாளர்களின் தலைவராக இருந்து வருகிறார் ஜான் கெல்லி. அவர் இந்த மாதத்தின் இறுதியில் பதவி விலகுகிறார்.

முன்னாள் கடற்படை அதிகாரியான ஜான் கெல்லி (68 வயது) - ஜனாதிபதி ட்ரம்ப் இடையே கருத்து வேறுபாடு இருப்பதாக முன்னதாக தகவல்கள் வெளிவந்தன. அவர் பதவி விலகுவதற்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் ஜான் கெல்லி தனது பதவி விலகலை அறிவித்துள்ளார்.

இதனை வெள்ளை மாளிகையில் நிருபர்கள் மத்தியில் பேசிய ஜனாதிபதி ட்ரம்ப் உறுதி செய்தார். அப்போது அவர் தெரிவிக்கும்போது, "ஜான் கெல்லி விடைபெறுகிறார். அவர் ஓய்வு பெறுகிறாரா என எனக்கு சொல்லத் தெரியவில்லை. ஆனால் அவர் மகத்தான பணியாளர். ஆண்டின் இறுதியில் அவர் வெளியேறுகிறார்" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், "அவரது இடத்துக்கு வரப்போவது யார் என்பது அடுத்த ஒன்றிரண்டு நாட்களில் அறிவிக்கப்படும். அவர்என்னோடுகிட்டத்தட்ட 2 ஆண்டுகள் இருந்துள்ளார்" என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (4)

# தேசத் துரோகிகளுக்கு மக்களின் சக்தியை நாம் காட்ட வேண்டும்

## சஜித் பிரேமதாஸ காட்டம்

(அவிசாவளை)

அரசியலமைப்பை மீறிய தேசத்துரோகிகளுக்கு மக்களின் சக்தியை நாம் காட்ட வேண்டும் எனக் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ, நாட்டின் எதிர்காலம், ஜனநாயகம், பிள்ளைகளின் எதிகாலம் எனச் சகல துறைகளையும் பாதுகாப்பதற்காக அரசியல் சதிகாரர்களுக்கான எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை நாட்டு மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதியின் யாப்புக்கு முரணான செயற்பாட்டினை எதிர்த்து "நீதிக்கான போராட்டம்" எனும் தொனிப் பொருளில் ஐக்கிய தேசியக் கட்சி நாளை மறுதினம் 13 ஆம் திகதி மக்களை அணி திரட்டும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் அவிசாவளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பை மீண்டும் உறுதிப்படுத்தி சட்டதிட்டங்களுக்கமைய நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தேவை எழுந்துள்ளது. அரசியலமைப்பினை மறந்து தனது தனிப்பட்ட எண்ணத்தை நாட்டில் நிலைநாட்டத் துணிந்தவர்களுக்கு மக்களின் பலத்தை நிரூபித்துக் காட்ட வேண்டும் எனவும் சஜித் மேலும் தெரிவித்தார். (இ-4)



## மக்களின் விருப்புடனே பணிப்பகிஷ்கரிப்பு

### ஆறுமுகன் தொண்டமான் விளக்கம்




(கொட்டகலை)

தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு குறித்த பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் அவசரப்பட்டு எடுத்த முடிவு அல்ல.

இலக்கை அடைய வேண்டும் என்பதால் அழுத்தம் கொடுப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவு என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் எம்.பி. தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் சென்று கேட்டபொழுது இந்தப் போராட்டத்தை மக்களும் ஏற்றுக் கொண்டனர் என உறுதிப்படத் தெரிவித்தார்.

அத்தோடு சில தொழிற் சங்கங்கள் தற்பொழுது இந்தப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் முன் வந்துள்ளார்கள்.

இது மகிழ்ச்சிக்குரிய விடயம். ஆகையால் இப் போராட்டம் வெற்றிப்பெறும் என்பதில் எமக்குப் பூரண நம்பிக்கை உண்டு எனவும் தெரிவித்தார்.

கொட்டகலை சீ.எல்.எப் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயிரம் ரூபாய் என்ற குறிக்கோளிலிருந்து இ.தொ.கா. மாறுபடப் போவதில்லை. மாறாக எம்மிடம் கடைசியாகப் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் 600 ரூபாய் அடிப்படைச் சம்பளமாகவும் மேலதிகக் கொடுப்பனவுகள் இணைந்ததாக 925 ரூபாய் என்ற அடிப் படைக்கு வந்தார்கள்.

இந்தத் தொகை தொழிலாளர்களுக்குப் போதுமான தொகையாக இல்லை. இதை அனைவரும் உணர்வார்கள். ஆகையினால் மேலும் எமது ஆயிரம் ரூபாய் இலக்கை நோக்கிய பயணத்திற்காக அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 6 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் வேறு எந்தப் பிரச்சினைகளும் இன்றி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இது தொடர்ந்து முன்னெடுக்கப் படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேநேரத்தில் கடந்த முறை ஒன்றரை வருடங்களாக அதவாது 18 மாதங்கள் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதன்போது வழங்கப்பட வேண்டிய நிலுவைப் பணம் அதிகம் என்பதனால் அதனை வழங்க மறுத்தனர். இதற்கு வேறு காரணங்களும் இருந்தன.

ஒக்டோபர் 26 ஆம் திகதி ஒரு பேச்சுவார்த்தை இருந்த நிலையில் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டு குழப்ப நிலை உருவாகியது காரணமாக அன்றைய தினம் இந்தப் பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டது.

இருந்த போதிலும் தொடர்ந்து இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் ஒரு முடிவு எல்லைக்கு வராததன் காரணமாகப் பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெற்று வரும் இந்த வேளையில் கொழும்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் தெரிவித்த அவர், பணிப்பகிஷ்கரிப்புத் தீர்வு எட்டப்படும் வரை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்கள் வெளிமாவட்டங்களுக்குப் பணிக்குச் செல்வது தோட்டங்களில் குறைவான ஊதியம் கிடைப்பதனால் ஊதிய உயர்வை வழங்கும் பொழுது இவர்களும் தோட்டத் தொழில்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுத் தோட்டங்களைப் பலமாக்க முடியும்.

அதேநேரத்தில் கம்பனிகள் எப்போது தோட்டங்களைப் பொறுப்பேற்றதோ அதிலிருந்து குறுகிய காலப்பகுதிக்கு அப்பால் வளமான தேயிலை நிலங்கள் காடுகளாக்கப்பட்டு வந்துள்ளன.

தோட்டத் தொழிலை தெரிந்து முன்னெடுக்கும் திறமை மிக்க தோட்ட அதிகாரிகள் இன்று இல்லை. இராணுவத்திலிருந்து விலகியவர்களும் கூட இன்று தோட்ட அதிகாரிகளாக இருக்கின்றார்கள். இவ்வாறான நிலையில் பெருந்தோட்டங்கள் நட்டம் அடைவதற்கான அளவிற்கு அவர்களே உருவாக்கிக் கொண்டார்கள். திறமையான தோட்ட அதிகாரிகளை நியமித்து எதிர்வரும் காலங்களில் தோட்டங்களைப் பலமாக்க முடியும். கம்பனிக்காரர்களால் தோட்டங்களைக் கொண்டு செல்ல முடியாது என்றால் அரசுக்குப் பொறுப்புக் கொடுத்து வெளியேறும்படி அன்றிலிருந்து நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

அதேநேரத்தில் நாட்டினுடைய அரசியல் நிலைக்கும் நீதிமன்றத்தின் ஊடான எதிர்பார்க்கும் தீர்ப்புக்கும் சம்பந்தம் இல்லாத விடயம் தான் இந்தச் சம்பளப் பிரச்சினை. மக்கள் மத்தியில் சென்று பெயர்போட்டுக் கொள்வதற்காகச் சிலர் எம்மை அவ்வப்போது தொட்டுக் கொள்கின்றார்கள்.

இன்றைய நிலையில் நாம் போராட்ட வடிவம் ஒன்றுக்கு வந்துள்ளமையை மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர். இந்தச் சம்பள விடயத்தில் ஊடகங்களுக்கும் பொறுப்புகள் உண்டு. ஆயிரம் ரூபாவை அடைவதற்காக ஊடகவியலாளர்களின்கையில் உள்ள பேனாவும் உதவி புரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### படிப்பு

"அறிவுத் தேவையை விட கவனக் குறைவுதான் அதிக கஷ்டத்தை உண்டாக்கிவிடுகிறது!" என்று ஓர் அறிஞர் சொல்லியிருக்கிறார்.

அதனால் ஏட்டுப்படிப்பும் வேண்டும். அனுபவப் படிப்பும் வேண்டும். இது இரண்டும் இருந்தால் தான் வாழ்க்கைச் சக்கரம் சுலபமாக ஓடும். இன்றைக்குப் படிப்பதற்குத் துணையாக இருப்பது புத்தகங்கள்.

பாடசாலையில் சரியாகப் படிக்கவில்லை என்றால்... தலையில் இருப்பது மூளையா? களிமண்ணா? என்று கேட்பது வழக்கம்.

ஆனால் முதல் புத்தகமே களிமண்ணாகத்தான் இருந்தது என்பதை நினைத்து ஆறுதல் அடைந்து கொள்ளலாம். ஆமாம். புத்தகங்கள் முதலில் களிமண் சுவடியாகத்தான் ஆரம்பமாகின! எங்கே மொசபத்தேமியாவிலே...! களிமண்ணால் தான் எழுத்துக்களைப் பதித்தார்கள்...! அதற்குப் பிறகு தான் கல்லில் பதித்தார்கள்...! கட்டையில் பதித்தார்கள்!

இப்போது அச்சாகவே பேப்பரில் பதிக்க ஆரம்பித்து விட்டோம். பேப்பரில் பதித்து விடலாம். மனதில் பதிகிறதா என்பது தான் கேள்வி! அது இருக்கட்டும்.

களிமண் படிவத்தில் பெரிய காப்பியம் எல்லாம் கூட பதிவு செய்து வைத்திருந்தார்களாம். பேப்பரில் எழுதும் பழக்கம் எகிப்தில் ஆரம்பமாகியது. **Cyprus papyrus** என்று ஒரு செடி அதிலிருந்து **papyrus** செய்து அதில் எழுதினார்கள்.

இது வெளிநாடுகளுக்குக் கூட ஏற்றுமதி ஆகியது. ஒரு தடவை எகிப்து மன்னர் இன்னொரு நாட்டு மன்னரிடம் சண்டை போட்டுக்கொண்டு இந்த ஏற்றுமதியை நிறுத்தி விட்டார். உடனே அந்த நாட்டு மன்னர் யோசித்தார். தோலில் எழுத ஆரம்பித்து விட்டார். கால் நடைகளின் தோல் இதற்கு உபயோகப்பட்டது.

இன்றைக்கு நாங்கள் வலது பக்கத்தில் ஆரம்பித்து இடது பக்கமாகப் படிச்சிக்கொண்டு போகின்றோம் அல்லவா! 14 ஆவது நூற்றாண்டில் கிரேக்கர் தான் இதற்கு வழிகாட்டினார்கள்.

15 ஆம் நூற்றாண்டில் ஜேர்மனியர் ஒருத்தர் தான் அச்சடிக்கும் முறையை கண்டுபிடித்தார். இன்றைக்கு நிறையப் புத்தகத்தை அச்சடித்துக் கொண்டிருக்கிறோம். அதைப் படிக்கிறார்களா? இல்லையா? என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அச்சடித்துக் கொண்டிருக்கிறோம்.

**Bacon** என்ன சொல்கிறார் தெரியுமா? "சில புத்தகத்தைச் சுவைக்க வேண்டுமாம்!" "சிலதை முழுங்கி விடணுமாம்!" "சில புத்தகத்தை ஜீரணம் செய்து விட வேண்டுமாம்!"

இப்படிச் சொன்னால் அதை அப்படியே அர்த்தம் செய்துகொண்டு "ருசி" பார்க்க ஆரம்பித்துவிடக்கூடாது. அவர் புத்தகம் என்று சொன்னால் அதில் சொல்லியிருக்கும் கருத்தைச் சுவைக்க வேண்டும் என்று அர்த்தம்.

படிப்பது என்பது வேறு, கற்றல் என்பது வேறு, படிக்க வேண்டியது சிலது இருக்கிறது, பார்க்க வேண்டியது சிலது இருக்கிறது, கற்க வேண்டியது சிலது இருக்கிறது. திருக்குறளைக் கற்கின்றேன் என்று சொல்ல வேண்டும். திருக்குறளைப் பார்த்தேன் என்று சொல்லக்கூடாது... ஏதோ புரட்டிப் பார்த்து விட்டுத் தூக்கிப் போட்டுட்டேன் என்று ஆகிவிடும்!

"நியூஸ் பேப்பர் வாங்குகிறோம். என்ன சொல்கிறோம்? பேப்பர் பார்த்தேன்... அதில் இப்படிப் போட்டிருக்கு" என்று சொல்கிறோம். இன்றைய பேப்பர் வாங்கி காலையிலிருந்து கற்றுக்கொண்டிருக்கிறேன் என்றா சொல்வது?

ஒரு நூறு-இருநூறு வருடத்துக்கு முன்னால் கூட யாராவது இறந்து போனால்... அவர்கள் பின்னாலும் படிப்பார்கள் என்னும் நம்பிக்கையில் சில புத்தகங்களையும் சேர்த்து வைத்துப் புதைப்பது வழக்கம். சில நாடுகளில் இருந்தது!

நம்ம ஊரிலும் சிலபேர் இறந்தால் புத்தகம் வைத்துப் புதைக்கலாம் என்று தோன்றுகின்றது! இருந்த வரைக்கும் தான் எதையும் படிக்கவில்லை... இனிமேலாவது படி என்று சொல்வது மாதிரி!

இவ்வளவு தகவலும் எதற்காக என்றால் படிப்பு ரொம்பவும் முக்கியம் என்பதை சொல்வதற்காகத்தான். படிக்கும் பிள்ளைகளுக்கு ஒரு வார்த்தை. உங்களுக்கெல்லாம் பரீட்சை நெருங்குகிறது... நன்றாகப் படியுங்கள்! "நெட்டுரு" போடக்கூடாது... புரிந்து கொண்டுபடித்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.


பரீட்சை வருகிறது என்றால் சிலபேர் அடுத்தவர்களை நம்பி இருப்பதும் உண்டு. அது ரொம்ப தவறு! ஒருத்தர் அப்படித்தான் அடுத்த வீட்டுக்காரரிடம் சொன்னார்!

"சேர்! பரீட்சை வருகிறது! உங்கள் பையனை நன்றாகப் படிக்கச் சொல்லுங்கள்!" என்றார். "என்பையன் பேரில் உங்களுக்கு ரொம்ப அக்கறை நன்றி சேர்!" என்றார் அவர். அதற்கு இல்லை சேர்! உங்கள் பையனுக்கு பக்கத்தில் இருந்து தான் என் பிள்ளை பரீட்சை எழுதப் போகின்றான்! அதனால் சொன்னேன்!" என்றார்.

# இன உறவுகளைச் சிதைத்த சிங்களம் மட்டும் சட்டமும் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலமும்

06

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.






வாகன இலக்கத் தகட்டில் சிங்கள ஸ்ரீ க்கு எதிரான போராட்டம்

மேலும் ஜூன் 1957 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவுக்கு எழுதிய கடிதம் மூலம் இலங்கை சுதந்திர கட்சியையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் பேச்சுகளுக்கு இணங்கச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும். இதன் விளைவாக 26.07.1957 அன்று தந்தை செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியோடு பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்க ஒரு உடன்படிக்கை செய்தார்.

இதுவே 1957 பண்டா - செல்வா உடன்படிக்கையாகும். இது பண்டா- செல்வா ஒப்பந்தம் என அழைக்கப்பட்டது.

## பண்டா-செல்வா ஒப்பந்தம்



1957ஆம் ஆண்டு தமிழர் தரப்பினர் திருமலைக்குப் பாதயாத்திரை சென்று அங்கே ஒரு மாநாடு நடத்தினார்கள். எஸ்.டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க அரசிற்கு ஒரு வருட காலக்கேடு கொடுத்து அதற்குள் தமிழ்மொழிக்குச் சமவுரிமை கொடுக்கவேண்டும் என்றும் தமிழ்ப் பிரதேச அபிவி ருத்திகளுக்காக பிராந்திய சபை கள் அமைக்கப்படல் வேண்டும் என்றும் திருமலை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த வேண்டுகோளுக்கு அமைய பண்டாரநாயக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் தொடர்சியாக பிரத மர் எஸ்.டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க தந்தை செல்வநாயகத்தோடு ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்ததன் பிரதி பலனே பண்டா-செல்வா உடன்படிக்கை ஆகும்.

இந்த இரு தலைவர்களின் சந்திப்பையும் அவர்களின் பேச்சையும் டெய்லி நியூஸ் பத்திரிகை பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. தந்தை செல்வாவுருகை தந்த காரின் கதவடியில் வந்த பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்கவின் கைகளைப்பிடித்த தந்தை செல்வா "பலமுறை நிதானமாக சிந்தனை செய்து தான் உங்களைச் சந்திக்க நான் ஒத்துக்கொண் டேன். இந்த இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் ஏதேனும் ஒன்றினைச் செய்தே ஆக வேண்டும். இன்றைய சூழலில் நாங்கள் ஒன்றித்து இப்பிரச்சினையை தீர்க்காவிட்டால் நாம் இறந்த பின்பு நாட்டிற்கு இப் பிரச்சினை பெரும் பேராபத்தை உண்டாக்கும்" என்று அன்றைய நாள் தந்தை செல்வநாயகம் தெரிவித்திருந்ததாக குறிப் பிடப்பட்டிருந்தது.

பண்டா- செல்வா ஒப்பந்தம் தமிழ்மக்களுக்கான சிறந்தொரு தீர்வை முன்வைத்திருந்தது. இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இலங்கை வாழ் தமிழ் மக்களின் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட்டதுடன் வடக்கு மாகாணம் ஒரு பிராந்தியமாகவும், கிழக்கு மாகாணத்தில் நாட்டின் இன்னொரு சிறுபான்மை இனமாகிய முஸ்லிம் மக்களையும் அவர்களின் தனித்துவத்தையும் மதிக்கும் நோக்கிலும் கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது அதற்கு மேலான பிரதேசங்களாக வகுக்கப்பட்டன.

இதன் பலனாக முஸ்லிம் மக்களும் தமிழர் தாயகத்தின் தனித்துவமான இனம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் அவர்களும் பிராந்தியத்திற்குரியவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். அவ்வொப்பந்தம் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தியது.

## ஒப்பந்தத்தில் உள்ளடங்கிய அம்சம்

இந்த ஒப்பந்தத்தின் மூலம் பரவலாக்கப்பட்ட அதிகாரங்களாக விவசாயம், கூட்டுறவு, காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம், சுகாதாரம், கைத்தொழில், கல்வி, மீன்பிடி, வீடமைப்பு சமூக சேவைகளும் வீடமைப்பும் என்பனவற்றோடு தமிழ் ஒரு தேசிய சிறுபான்மை மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி சிங்கள மொழிக்கு குந்தகம் இல்லாமல் தமிழிலும் நடைபெறும் என திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோல, குடியேற்றங்களும் கல்லோயா அபிவிருத்தித்திட்டமும் அதில் உள்ளடங்கியிருந்தது.

இவ்உடன்படிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்ததுடன், பண்டாரநாயக்கவுக்கு ஆதரவு வழங்கிய பௌத்த பிக்குகள் கடுமையாக எதிர்த்தனர். ஆறு மாதங்களில் நடைமுறைப்படுத்துவதாகக் கூறப்பட்ட இவ் ஒப்பந்தம் பலத்த எதிர்ப்பின் காரணமாக மேலும் சில மாதங்களாக நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

## கிழித்தெறியப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம்

இந்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன கண்டிக்குப் பாதயாத்திரை போனார். அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியானது "முதல் காலடி" (First Step) என்ற வெளியீட்டையும் வெளியிட்டு இனவாதப் பரப்புரையில் ஈடுபட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் பரப்புரை நாளேடான "சியரட்ட" (Siyaratta) மிக மோசமான இனவாதப் பரப்புரையைத் தமிழருக்கு எதிராக மேற்கொண்டது.

கண்டிக்குப் பாதயாத்திரை போகப் புறப்பட்ட ஜே.ஆர் இன் பாதயாத்திரை இம்புள்கொட என்ற இடத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதற்கிடையில் பண்டார நாயக்கவைப் பதவிக்குக் கொண்டு வந்த பிக்கு பெரமுனவைச் சேர்ந்த பௌத்த பிக்குமாரும், ஜாதிக விமுக்தி பெரமுனவைச் சேர்ந்த வெலிமடை எம்.பி கே.எம்.பி இராஜரட்னவும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் மெத்தானந்த போன்றவர்களும் சிங்கள தேசிய முன்னணியைச் சேர்ந்த ஆர்.ஜி. சேனநாயக்க போன்றவர்களும் பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு பிரதமர் பண்டாரநாயக்காவுக்கு அழுத்தம் கொடுத்ததுடன், 1958 ஏப்ரல் 9 ஆம் நாள் விமலவிஜயவர்த்தன தலைமையிலான குழுவினர் ஒப்பந்தத்தைக் கிழித்தெறியும்படி கோரிப் பிரதமரின் இல்லத்தை முற்றுகையிட்டுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் கிழித்துத் தூக்கி வீசப்பட்டது.

## மீண்டும் சிங்கள ஸ்ரீ இற்கு எதிரான போராட்டம்

பண்டா - செல்வா ஒப்பந்த த்தை நிறைவேற்றாது காலங் கடத்திவந்த அரசாங்கம், தமிழ் மக்களுக்கு வேதனை தரும் செயல்களில் மீண்டும் இறங் கியது. சிங்கள ஸ்ரீ இலக்கத் தகடு பொறித்த பஸ் வண்டி களை (1957இல் நிறைவேற்றப்பட்ட போக்குவரத்துச் சட்டத்தின் பிரகாரம் பஸ் சேவை மக்கள் மயப்படுத்தப்பட்டது) வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப் போவதாக அரசாங்கம் அறிவித்தது. இவ்வாறு அனுப்பப்பட்டால் மீண்டும் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பை ஆரம்பிக்க நேரிடும் , அதனால் தமிழர்-சிங்களவர் ஒற்றுமை பாதிகப்படும் என்பதை உணர்ந்த தந்தை செல்வா போக்குவரத்து அமைச்சருடன் பேச்சு வாரத்தை நடத்தினார். இச் சந்திப்புப்பற்றி அமைச்சர் மைத்திரிபால பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செய்தி வருமாறு.

"நான் உயர்ந்த மதிப்புடன் போற்றும் செல்வநாயகத்துடன் சிங்கள ஸ்ரீ எழுத்துப் பிரச்சினை பற்றி கலந்துரையாடினேன். வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஓடும் பஸ்களின் இலக்கத் தகட்டில் தமிழ் எழுத்துப் பொறிப்பதை அதிகார பூர்வமாக அனுமதிக்க முடியாது என்ற கருத்தை செல்வநாயகம் புரிந்து கொண்டதாக நான் உணர்ந்தேன். எல்லா பஸ்களும் கொழும்பில் பதிவு செய்யப்படுகின்றன. இலக்கத் தகட்டில் உள்ள எழுத்து சிங்களஸ்ரீயாக இருக்கவேண்டுமெனச் சட்டம் பணிக்கிறது. சிங்கள ஸ்ரீ பொறித்த பஸ்கள் எதனையும் வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பவேண்டாம் என்ற அவரது கோரிக்கைக்கு நான் இணக்கம் தெரிவித்தேன்."

சிங்கள ஸ்ரீ பொறித்த பஸ்கள் எதனையும் வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பவதில்லை என்று ஒப்புக்கொண்ட போக்குவரத்து அமைச்சர் தமது உறுதியை மீறி 1958-03-17 இல் சிங்கள ஸ்ரீ பொறித்த பஸ்களை வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பினார். (தொடரும்)

# மைத்திரிக்கு எதிரான குற்றவியல் பிரேரணைக்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டோம்

## மகிந்த அணி எம்.பி.ரத்நாயக்க உறுதி



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கை பிழையெனக் கூறி அவர் மீதான குற்றவியல் பிரேரணைக்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டோம் என மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்படுகின்றதே அதற்கு நீங்கள் ஆதரவளிப்பீர்களா? எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குற்றவியல் பிரேரணைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அதனைப் பெற்றுக்கொள்ள முடியாது.

அத்தோடு தற்போதுள்ள நிலைமையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிழையெனக்கூறி நாங்கள் குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவளிக்க மாட்டோம்.

தனிப்பட்ட கருத்தின்படி நான் ஆதரிக்கமாட்டேன். எங்கள் தரப்பினரும் ஆதரவளிக்க மாட்டார்கள் என நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# கொழும்பில் துப்பாக்கிச்சூடு; பெண் ஒருவர் உட்பட ஐவர் காயம்

(கொழும்பு)

கொழும்பு - மட்டக்குளி பகுதியில் நேற்று நண்பகல் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பத்தில் பெண் ஒருவர் உட்பட ஐந்து பேர் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார் .

மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு ஆயுததாரிகளே ஆட்டோ ஒன்றின் மீது குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, ஆயுததாரிகள் இனங்காணப்படவில்லையெனவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-4)





நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/ 247 மத்திய சபை உறுப்பினர்களான திருமதி ரஜீபன் தர்மினி, திருமதி நிசாந்தன் யாழினி ஆகியோர் சமாதான நீதவான்களாக யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் கடந்த 26 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

# பாற்சோறுக்குப் பதிலாக மரணச் சோறு தேசியக் கொடியில்லை; இனி புலிக்கொடி

## கோத்தபாயவின் அமைப்பு கொக்கரிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை நடத்தக் கூடாது என்று தீர்ப்புக் கிடைத்தால் அதனை கொண்டாட நினைப்பவர்கள் பாற்சோறுக்குப் பதிலாக மரண சோறு உண்ணுங்கள். தேசியக்கொடிக்குப் பதிலாக வடக்கில் புலிக் கொடியை ஏற்றுங்கள் என வைத்தியர் சீதா அரம்பேபொல தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் எலிய அமைப்பு நேற்று நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு அழிவுப் பாதையில் செல்வதைத் தடுத்து நிறுத்தும் வகையில் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்திற்கு எதிராக அடிப்படைவாதிகள் நீதிமன்றம் சென்றனர். மக்கள் ஆணைக்கு எதிராகவே நீதிமன்றம் சென்றுள்ளனர். நீதிமன்றத் தீர்ப்பு எதிராக வேண்டுமானாலும் அமையலாம்.

ஆனால் பொதுத் தேர்தலை நடத்தக் கூடாது என்று தீர்ப்புக் கிடைக்கப்பெற்றால் பாற்சோறு உண்ணத் தயாராக இருந்தவர்கள் மரணச் சோறு உண்ணத் தயாராக வேண்டும். மகிழ்ச்சியில் பட்டாசு கொளுத்த நினைத்த



வர்கள் தமது பிள்ளைகளின் மார்பில் பாயும் துப்பாக்கி ரவைகளாகவே அதனைக் கருத வேண்டும்.

தேசியக் கொடியை ஏற்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளவர்கள் வடக்கில் புலிக் கொடியை ஏற்றுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# இலவச தொழிற்பயிற்சி கற்கைநெறி

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ். மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற் பயிற்சி கற்கைநெறிகளை நடத்தி வருகின்றது.

இதன் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பின்வரும் கற்கை நெறிகள் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப் படவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், காய்ச்சி ஒட்டுபவர், அலுமினியம் பொருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், வளி சீராக்கி மற்றும் குளிர்சாதன உபகரணங்கள் திருத்துநர், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், சமையலாளர், வரவேற்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர், மர வேலை தொழில்நுட்பவியலாளர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், ஆட்டோ திருத்துநர். இவை ஆறு மற்றும் ஒரு வருடம் பயிற்சிக் காலத்தைக் கொண்டது.

இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-3 அல்லது 4 (NVQ-3/4) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக்கற்கை நெறிகளை முழுமையாகப் பூர்த்தி செய்து NVQ சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் அனைவருக்குமான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இக்கற்கைநெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம் இல. 12 கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது வலந்தலைச் சந்தியிலுள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 28.12.2018 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ)



சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்தினால் நகரை அழகுபடுத்தும் நோக்கில் மரநடுகைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது. இதன்போது இராமலிங்கம் வீதி மற்றும் கென்ஸ்மன் வீதி ஆகிய இரண்டு வீதிகளின் இருமருங்கிலும் மரங்கள் நடப்பட்டு இளைஞர் கழகத்தினரால் பராமரிக்கப்படவுள்ளது. சாவகச்சேரி நகர இளைஞர் கழக தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் விருந்தினராகக் கலந்து கொண்டு மரநடுகை நிகழ்வினை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இம் மரநடுகை நிகழ்வில் சாவகச்சேரி நகராட்சி மன்ற உபதலைவர் அ.பாலமயூரன், முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர், கிராம உத்தியோகத்தர் சுபாஸ்சந்திரபோஸ், இளைஞர் சேவைகள் அதிகாரி அனுதரன், இளைஞர் கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டு மரக்கன்றுக்ளை நாட்டிவைத்தனர். (படங்கள்:-சுபேசன்)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

117

இம்மரங்களை எரித்துப் பெற்ற கரி வெடிமருந்து உற்பத்தி செய்யும் ஆலையை இயக்கப் பயன்பட்டது. இதன் மூலம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வெடி மருந்துக்கான செலவைத் தவிர்த்திருக்கின்றனர்.

அதற்காகத் தமிழ்ப் பிரதேசங்களின் இயற்கை வளங்களை அழித் திருக்கின்றார்கள். போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் தோம்புப் பதிவேடு மிகவும் ஒழுங்காகச் செய்யப்பட்டு அதன்மூலம் மக்களிடமிருந்து வரி அறவிடப்பட்டது.

டச்சுக்காரர் ஆட்சியின் போது அத்தோம்பு எரிக்கப்பட்ட போதும் அதன் போறல் (Foral) என அழைக்கப்படும் சுருங்கிய வடிவம் அவர்களுக்குக் கிடைக்கப்பெற்றது.


அதனை அடிப்படையாகக் கொண்டு டச்சுக்காரர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள அத்தனை கிராமங்களையும் உள்ளடக்கி 1674 இல் தோம்புப் பதிவேட்டை மிகவும் சீராகத் தயாரித்தார்கள்.

அதன் உதவியுடன் பல்வேறு பட்ட வரிகளை தமிழ் மக்களிடமிருந்து அறவிட்டனர். ஆனால் வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலைப் பிரதேசங்களில் இவ்வாறான தோம்பு பதிவேடு தயாரிக்கப்படவில்லை.

டச்சுக்காரரினால் விதிக்கப்பட்ட ஆள்வரியில் (Personal tax) மிகவும் முக்கியமானது தலைவரியாகும் (Poll tax). இவ்வரி இலங்கையிலுள்ள வயது வந்த ஆண்கள் ஒவ்வொருவருக்கும் பொதுவாக விதிக்கப்பட்டு இதன்மூலம் அதிக பணத்தை டச்சுக்காரர் பெற்றனர்.

ஒவ்வொருவரும் மூன்று பணங்களை வரியாகச் செலுத்த வேண்டியிருந்தது. வியாபாரிகளும் கலை வல்லுநரும் வருடமொன்றுக்கு 6 பணங்கள் வரியாகக் கொடுக்க வேண்டியிருந்தது. ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் தலைவரி ஒரேயளவில் தான் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 1677 இல் தோம்பு புதுப்பிக்கப்பட்ட போது தலைவரி எட்டுப் பணங்களாக உயர்த்தப்பட்டது.




“பொதுவாக உயர் சாதியினர், வியாபாரிகள் தாம் பன்னிரெண்டு நாட் கள் இலவசமாக வேலை செய் வதைத் தவிர்த்து அதற்குரிய பணத்தை வரியாகச் செலுத்தினர். இந்த ஊழிய சேவை மிகவும் தீவிரமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. பல்வேறு வகையான கட்டட வேலைகள், திருத்த வேலைகள், வீதி போடுதல், கோட்டை கட்டுதல், வீதித் தடைகள் கட்டுதல், கிறிஸ்தவ ஆலயங்களைக் கட்டுதல், அரச காணிகளைப் பயன்படுத்துதல் போன்ற வேலைகளுக்கு மனித பலம் தேவைப்பட்டது என்பதே இதற்கு அடிப்படைக் காரணம்”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

இவ்வரி மீண்டும் 1688 இல் உயர்த்தப்பட்ட போது யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்த தன் விளைவாக தலைவரி, மீண்டும் மூன்று பணங்களாகக் குறைக்கப்பட்டது.

அடுத்த முக்கியமான ஆள்வரியாக தொழில் வரி காணப்பட்டது. தனிப்பட்டவர்களின் தொழில்சார் அடிப்படையில் அல்லது சாதி அடிப்படையில் இவ்வரி விதிக்கப்பட்டது. தோம்பு பதிவேட்டில் பெயர் பதியப்பட்ட அத்தனை பேர்களிடமிருந்தும் 1696 களிலிருந்து இவ்வரி அறவிடப்பட்டது.

அதிகாரி வரியானது (Adigari tax), உயர் சாதியிலுள்ள அதிகாரிகளுக்கு அவர்களின் அந்தஸ்தின் பொருட்டு விதிக்கப்பட்ட வரியாகக் காணப்படுகின்றது. இவ்வாறான ஆள் வரியுடன் தனிப்பட்ட ஊழியர் வரியும் விதிக்கப்பட்டது.

ஒரு வருடத்தில் பன்னிரெண்டு நாட்களுக்கு அரசாங்கத்திற்கு இலவசமாக வேலை செய்யவேண்டியதற்கான வரியாக இது காணப்பட்டது. இவ்வாறாக ஊழியம் செய்ய விரும்பாதவர்கள் வருடமொன்றுக்கு பன்னிரெண்டு பணங்களை (Fanams) வரியாகச் செலுத்த வேண்டும்.

இவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தின் தொகை பதினெட்டாம் நூற்றாண்டில் 75 ஆயிரம் புளோறின்களாக (Florins) காணப்பட்டிருக்கின்றது. பொதுவாக உயர் சாதியினர், வியாபாரிகள் தாம் பன்னிரெண்டு நாட்கள் இலவசமாக வேலை செய்வதைத் தவிர்த்து அதற்குரிய பணத்தை வரியாகச் செலுத்தினர்.

இந்த ஊழிய சேவை மிகவும் தீவிரமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. பல்வேறு வகையான கட்டட வேலைகள், திருத்த வேலைகள், வீதி போடுதல், கோட்டை கட்டுதல், வீதித் தடைகள் கட்டுதல், கிறிஸ்தவ ஆலயங்களைக் கட்டுதல், அரச காணிகளைப் பயன்படுத்துதல் போன்ற வேலைகளுக்கு மனித பலம் தேவைப்பட்டது என்பதே இதற்கு அடிப்படைக் காரணம்.

டச்சுக்காரர் இவ்வேலைகளுக்குத் தமது வருமானத்திலிருந்து செலவிட விரும்பவில்லை. ஊழிய சேவையைக் கட்டாய சேவையாக்கித் தமது வேலைத் திட்டங்களை இலவசமாகச் செய்து முடித்தார்கள்.

இவ்வாறான ஆள்வரியை விட மேலும் நிலங்களுக்கும் அதில் விளையும் பொருட்களுக்கும் வரி அறவிடப்பட்டது. தோம்பு அறிக்கையிலிருந்து நிலங்களின் விபரங்கள் யாவும் திரட்டப்பட்டு வரி அறவிடப்பட்டது.

புதிய தோம்பு தயாரிக்கப்பட்டு அத்தோம்பு பின்னர் 1677 இல் புதுப்பிக்கப்பட்ட பொழுது அதனூடாகப் பெற்ற நிலவரி வருமானம் சுமார் 70 ஆயிரம் புளோறின்கள் (Florins) ஆகக் காணப்பட்டது. மேலும் இந் நிலவரியைவிட அந்நிலங்களில் உற்பத்தியாகும் உற்பத்திப் பொருட்களுக்கும் பழ மரங்களுக்கும் வரி விதிக்கப்பட்டது.

அவ்வாறான உற்பத்திகளும் மரங்களும் கணக்கிடப்பட்டு அவற்றுக்குரிய வரித்தொகை நிலவரியுடன் சேர்த்துக் காணி உரிமையாளரிடமிருந்து அறவிடப்பட்டது.

இவற்றைவிட தானிய வரியும் அறவிடப்பட்டது. நெல், பயறு, உழுந்து, எள்ளு, கொள்ளு, குரக்கன் போன்ற தானியங்களுக்கு வரி விதிக்கப்பட்டது.

(தொடரும்)

## சு.க.-பெரமுன கூட்டணியின்

# தலைமைத்துவத்தை மகிந்தவுக்கு வழங்கினால் தான் தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்த முடியும்

(கொழும்பு)

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சுதந்திரக் கட்சி இணைந்து ஒரே கூட்டமைப்பாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும் எனத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க, அந்த கூட்டணியின் தலைமைத்துவத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கினால் மாத்திரமே அடுத்தடுத்த தேர்தல்களில் வெற்றியை உறுதிப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.



அத்துடன் நாளை 12 ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கை பிரேரணையை முன்வைக்கவுள்ளதாக ஐ.தே.மு தெரிவித்துள்ளது.

அன்றைய தினமும் நாம் பாராளுமன்ற அமர்வினை புறக்கணிக்கவே தீர்மானித்துள்ளோம். மேலும் ஜே.வி.பி. இதற்கு ஆதரவளிக்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளது. கூட்டமைப்பும் இன்னும் தீர்க்கமான முடிவை அறிவிக்கவில்லை.

எனவே ஐ.தே.முவால் அதனை நிறைவேற்ற முடியாது என்பது தெளிவாகியுள்ளது. இருந்தும் அவர்களால் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான நடவடிக்கைகள் வேடிக்கையாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# ஜனாதிபதிக்கு எதிராக மனநலக்கோளாறு மனு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக, மன நலக் கோளாறு வழக்கைத் தாக்கல் செய்யுமாறு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மன நலக்கோளாறு கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துக்கு அமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்றை ஆரம்பிக்குமாறு கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் மெண்டாமுஸ் பேராணை ஒன்றின் ஊடாக உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியே பெண்ணொருவர் குறித்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

ம்ாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை ஆரம்பிக்குமாறு கோரியுள்ள தக்ஷிலா ஜெயவர்த்தன எனும் பெண், கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் உத்தரவு பிறப்பிக்குமாறு மனுவில் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# பரீட்சைக்குச் சென்ற மாணவி வீடு திரும்பவில்லை

## தந்தை பொலிஸில் முறைப்பாடு

(சியம்பலாண்டுவ)

கல்விப் பொதுத்தராத சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றச் சென்ற மாணவி வீடு திரும்பவில்லையென மாணவியின் தந்தை சியாம்பலாண்டுவை பொலிஸ்நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

சியாம்பலாண்டுவைப் பகுதியின் தொம்பகாவெலையைச் சேர்ந்த காயத்திரிலக் பியசேனாதீர என்ற மாணவியே காணாமல் போயுள்ளார்.

குறித்த மாணவி பரீட்சைக்கு தோற்றுவதற்கு சென்ற நிலையில் வீடு திரும்பாததால் மாணவியின் பெற்றோர் தமது மகளை தேடியும் காணவில்லை என்பதால் சியாம்பலாண்டுவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்நிலையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

# இரத்தினக்கல் வியாபாரி வீட்டில் மீட்கப்பட்ட 13 துப்பாக்கிகள் குறித்து தீவிர விசாரணை

(பேருவளை)

பேருவளையில் தனது வீட்டில் ஆயுதங்களை மறைத்துவைத்திருந்த இரத்தினக்கல் வியாபாரி உள்ளிட்ட சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, இரத்தினக்கல் வியாபாரியை தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றத்தில் அனுமதி கோரவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



மான் ஒன்றை கொன்று அதனை கொண்டு செல்லும் வழியில் பதுரலிய பிரதேசத்தில் வைத்து பொலிஸார் குறித்த இரத்தினக்கல் வியாபாரியையும் மற்றுமொருவரையும் கைது செய்திருந்தனர்.

இதனையடுத்து, இரத்தினக்கல் வியாபாரியின் வீட்டில் தேடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது, 13 துப்பாக்கிகளும் 906 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த ஆயுதங்களுக்கு எந்தவித அனுமதிப்பத்திரமும் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

மேலும் கைது செய்யப்பட்ட இரத்தினக்கல் வியாபாரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் ஹெரோயின் தொகை தொடர்பில் விசாரணைகளின் போது அதிக அவதானம் செலுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1583

Search for people, places and things

### பூமி

பாசம் வையுங்கள் தவறில்லை... ஆனால் பைத்தியமாகி விடாதீர்கள்... ஏனெனில் இங்கு முடிவே இல்லாத வாழ்வும் இல்லை பிரிவே இல்லாத உறவும் இல்லை... எல்லாம் சில காலம் தான்



### தர்சனா

உன்னைத் தேடிவரும் அன்பை அழகாக நேசி அதில் என்றும் உண்மை இருக்கும்



### இலக்கியா

இதயம் வலிக்கும்போது கண்கள் கலங்கினால் அது காதல், கண்கள் கலங்கி இதயம் வலித்தால் அது நட்பு



### காயத்திரி

அன்புக்கு பணம் தேவையில்லை...!



### ஹர்சினி

நீரோடைக்கும் பாறைக்கும் நடக்கும் போராட்டத்தில் கடைசியில் ஜெயிப்பது ஓடையே... பலத்தினால் அல்ல விடாமுயற்சியினால் முயன்று பாருங்கள் எதுவும் முடியும்...



### சந்திரிகா

நாம் உண்ணும் உணவை வீண் செய்யாமல் இருப்பதே நாம் செய்யும் முதல் அன்னதானம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மோதலையும் முரண்பாட்டையும் வேடிக்கை பார்த்தால் அழிவே எஞ்சும்



(ஏறாவூர்)

மோதலையும் முரண்பாட்டையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தால் அழிவுகளே எஞ்சும் என முகாமைத்துவ ஆலோசகர் ஜே. பெனடிக்ற் தெரிவித்துள்ளார்.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மோதல் பகுப்பாய்வுக் கருவிகள் பற்றிய பயிற்சி நெறி மட்டக்களப்பு கிறீன் கார்டன் விடுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர் இராசையா மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்திலுள்ள சர்வமத சமாதான செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த முகாமைத்துவ ஆலோசகர் ஜே.பெனடிக்ற். முரண்பாட்டிலும் அதன் பின்னர் மோதலிலும் ஈடுபட்டுள்ள சாராரிடமே தமது முரண்பாடுகளுக்கான மாற்றுத் தீர்வுகளும் ஆலோசனைகளும் நிறையவே இருக்கும். முரண்பாட்டுக்கு அல்லது மோதலுக்குள்ளான குடும்பம், குழுவினர், அல்லது சமூகம் ஆகியோருக்கிடையில் இணக்கப்பாட்டைத் தோற்றுவிக்க முனைகின்ற தரப்பினர் முரண்பாட்டுக்கு அல்லது மோதலுக்குள்ளான அந்தத் தரப்பினரிடமிருந்தே தீர்வுக்கான யோசனைகளைப் பெறுவதற்கு வழிகாட்ட வேண்டும்.

இது ஒரு சவால் நிறைந்த பணி, ஆனாலும் சவால்களை எதிர்கொண்டு இப்பணியை திறம்பட செய்து முடிப்பதே சமாதான ஆர்வலர்களின் அர்ப்பணிப்பாக இருக்க வேண்டும்.

பல கோணங்களில் முரண்பாடுகளுக்கான அல்லது மோதலுக்கான காரணங்கள், விளைவுகள் மனப்பாங்குகள், நடத்தைகள் இருக்கக் கூடும்.

இவற்றைப் பகுப்பாய்வு செய்து முரண்பாட்டுக்கு அல்லது மோதலுக்கு முகங்கொடுத்த சாராருக்கிடையில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும். முரண்பாட்டின் பின்னர் சாதகமான நிலையை ஏற்படுத்துவதற்கு மாற்றுவழிகள் பல உள்ளன.

ஆனால், அது முரண்பாட்டுக்கு அல்லது மோதலுக்கு முகங்கொடுத்தவர்களிடமிருந்தே இத்தகைய மாற்று யோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுபடுத்தலைச் செய்ய வேண்டும்.

ஒரு தரப்பார் அல்லது பல தரப்பார் முரண்பாட்டு அல்லது மோதல் சூழ்நிலைகளை அப்படியே தக்கவைத்துக் கொண்டிருக்க சமாதான விரும்பிகளான மற்றவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவ்வாறு நிகழுமாக இருந்தால் அழிவுகளே மிஞ்சும். அதனால் எந்தத் தரப்பாருக்கும் விமோசனம் கிட்டப் போவதில்லை.

புரிந்துணர்வோடு எல்லாத் தரப்பாருக்கும் "வெற்றி வெற்றி" என்று கிடைக்கப் பெறும் அடைவே நிரந்தர முரண்பாட்டு அல்லது மோதல் தீர்வுக்கு வழிவகுத்து சமாதானப் பாதையில் அனைவரும் பயமின்றிப் பயணிக்க உதவும் எனத் தெரிவித்தார். (இ-4)

# வெள்ளத்தில் மூழ்கியது அம்பாறை; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. மழையுடன் கூடிய காலநிலை மாற்றத்தால் இம்மாவட்டத்தில் சில வேளைகளில் பனி மூட்டம் நிறைந்தும் காணப்பட்டது. சீரற்ற காலநிலை காரணமாக தாழ்நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. பாதைகள் பலவற்றில் நீர் நிரம்பிக் காணப்படுவதால் மக்களின் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக தாழ்நில விவசாயச் செய்கைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், கடற்றொழிலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடற் பகுதியில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதால் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடற்கரைப் பிரதேசங்களில் வீசிவரும் பலத்த காற்றின் காரணமாக கரையோரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மீனவ வாடிகள், சிறிய ரக குடிசைகள் என்பவற்றுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை ஒலுவில் துறைமுகத்தினை அண்டிய பகுதியில் கடற்றொழிலுக்குச் செல்லும் சிறிய ரக வள்ளங்கள் சில காற்றின் வேகத்திற்கு தாக்குப் பிடிக்க முடியாமல், அலையின் வேகத்தினை தடுப்பதற்காக கடலினுள் போடப்பட்டுள்ள கற்களில் மோதுண்டு, சேதமாகியுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள தாழ்நிலக் குடியிருப்புக்கள், தாழ் வீதிகள் மற்றும் வடிகான்கள் போன்றவற்றில் நிறைந்துள்ள நீரை அப்புறப்படுத்தும் முயற்சிகளில் உள்ளூராட்சி மன்றத்தினர் ஈடுபட்டுள்ளனர். மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும், விவசாயச் செய்கைகளிலும் நிறைந்துள்ள நீரை முகத்துவாரங்களினூடாக அப்புறப்படுத்தும் முயற்சிகளில் துறைசார் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் ஈடுபட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனை கோணாவத்தைப் பாலத்தினை அண்டிய பகுதியில் நீர்த் தாவரங்கள் நிறைந்துள்ளதால் இப்பிரதேச விவசாய நிலங்களில் உள்ள நீரை அப்புறப்படுத்துவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. (இ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 150 | 120 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 480 | 400 | 450 |
| தக்காளி | 300 | 300 | 320 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 120 | 100 | 100 | 90 | 120 |
| கரட் | 200 | 260 | 240 | 220 | 280 |
| பூசணி | 80 | 50 | 60 | 40 | 80 |
| புடோல் | 120 | 120 | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 140 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 300 | 380 | 320 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 120 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 70 | 60 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 280 | 230 | 160 |
| லீக்ஸ் | 200 | 170 | 200 | 130 | 250 |
| பீற்றூட் | 200 | 140 | 200 | — | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 300 | 220 | 350 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — |
| போஞ்சி | 150 | 150 | 180 | 110 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 130 | 110 | 100 | 120 |
| கீரை -1பிடி | 40 | 40 | 60 | 40 | 80 |
| தேசிக்காய் | 500 | 400 | 450 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 45 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 350 | 150 | 260 | — | 240 |
| வெங்காயப்பூ | 300 | — | 400 | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 40. | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 80 | 130 | 100 |

# செய்தித்துளிகள்

## நேர்முகத் தேர்வு நடத்தியும் நியமனங்கள் வழங்கவில்லை

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் வெற்றிடங்களை நிரப்ப போட்டிப் பரீட்சை நடத்தி நேர்முகத் தேர்வு நடத்திய பின்னரும் நியமனங்கள் வழங்கப்படாமையால் எதிர்க் கட்சித்தலைவரிடம்பரீட்சார்த்திகளால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு பரீட்சைப் பெறுபேறுகளையும் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்த பரீட்சார்த்திகள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் எழுத்து மூலமாக முறையிட்டுள்ளனர். (இ-4)

## நுகர்வோர் சட்டத்தை மீறிய 1500 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நுகர்வோர் சட்டத்தை மீறிய 1500 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தினை முன்னிட்டு இதுவரை 1800 வர்த்தக நிலையங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போதே குறித்த 1500 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த சோதனை நடவடிக்கையானது எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை தொடரும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தல், அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல் ஆகியன தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுவதுடன், இதற்காக மாவட்ட ரீதியாக விசேட குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## 11 கஜமுத்துக்களுடன் நான்கு பேர் கைது



(கண்டி)

கண்டியின் இருவேறு பிரதேசங்களில் விலை மதிப்பற்ற 11 கஜமுத்துக்களுடன் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கண்டி ஊழல் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் பிற்பகல் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி இருவர் கொலை

(இரத்தினபுரி)

இரத்தினபுரி - பாணந்துறை பிரதான வீதியின் கொரக்கா எல்ல பகுதியில் நேற்று அதிகாலை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த இருவரும் 32 மற்றும் 33 வயதையுடையவர்கள் எனத் தெரிவித்த பொலிஸார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## ஆட்டோ விபத்தில் சிக்கி இரு இளைஞர்கள் பலி

(மாத்தறை)

காலி - மாத்தறை வீதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தொன்றில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்து காலி - மாத்தறை வீதியின் அகங்கம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. பேருந்து-ஆட்டோ ஒன்றுடன் மோதியதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது 20 மற்றும் 18 வயதுடைய இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகினறனர்.(இ-4)


## குப்பையிலிருந்து கைக்குண்டு மீட்பு

(அம்பாறை)

அம்பாறை, நற்பிட்டிமுனை பழைய மின்சார சபை வீதியில் நேற்று முக்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். நற்பிட்டிமுனையிலுள்ள குறுக்கு வீதியில் குவித்து வைக்கப்பட்டிருந்த குப்பைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு கல்முனை பொலிஸாரால் மீட்ககப்படுள்ளது. (இ-4)




# முல்லா கொடுத்த கோழி விருந்து



முல்லாவுக்கு வேண்டிய கிராமத்து விவசாயி ஒருவர், ஒரு நாள் முல்லாவை பார்க்க வந்திருந்தார். அப்போது அவர் ஒரு பெரிய கோழியை பரிசாகக் கொடுத்து விட்டுச் சொன்னார். "கிராமத்திலிருந்து எனது நண்பர்கள் பலர் வருவார்கள். அவர்களை உபசரித்து வைத்தால் போதுமானது" என்றார். பின் முல்லாவும் அவருடைய மனைவியும் அந்தக் கோழியை சுவையாக சமைத்து உண்டு மகிழ்ந்தார்கள்.

சில நாட்கள் கழித்து, முல்லாவின் வீட்டுக்கு வந்த ஒருவர், முன்பு கோழி பரிசளித்தவருடைய நெருங்கிய நண்பர் என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார்.

"அப்படியா மிக்க மகிழ்ச்சி" என்று வரவேற்ற முல்லா வந்தவருக்கு நல்ல உணவளித்து உபசாரம் செய்து அனுப்பி வைத்தார்.

இரண்டு நாட்கள் கழித்து மற்றொரு மனிதர் முல்லாவின் வீட்டுக்கு வந்தார். அவரும், "நான் கோழி பரிசளித்தவரின் நண்பனுக்கு நண்பன்" என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். அவரையும் உபசரித்து அனுப்பி வைத்தார் முல்லா.

இதன்பின் இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு மற்றொருவர் வந்து "கோழி பரிசளித்தவரின் நண்பனுடைய நண்பனுக்கு நண்பன்" என்று கூறிக் கொண்டு வந்தார். இவ்வாறு ஒருவர்பின் ஒருவராக ஆட்கள் வருவதைக்கண்டு, இதற்கு ஒரு நல்ல முடிவு கட்ட வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார் முல்லா.

பின்பு முல்லா வந்தவரை பிரமாதமாக வரவேற்று அமரச் செய்து, "தயவுசெய்து கொஞ்ச நேரம் காத்திருங்கள். அருமையான கோழி சூப் தயாராகிக் கொண்டிருக்கிறது. ருசித்து சாப்பிட்டு விட்டுச் செல்லலாம்" என்று கூறிவிட்டு முல்லா சமையலறை நோக்கிச் சென்றார். அங்கு தமது மனைவியிடம் ஏதோ சொல்லிவிட்டுத் திரும்பினார்.

சற்று நேரத்திற்குப் பிறகு முல்லாவின் மனைவி ஒரு கோப்பையைக் கொண்டு வந்து "சூப் தயாராகிவிட்டது, சாப்பிடுங்கள்" என்று புதிதாக வந்தவரின் முன் மேசையின் மீது வைத்து விட்டுச் சென்றாள். முல்லா அந்த புதிதாக வந்தவரிடம் "சூப் சூடாக இருக்கிறது பார்த்துச் சாப்பிடுங்கள்" என்று கூறினார்.

விருந்தாளி நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு ஆவலோடு சூப்பை எடுத்துக் குடிக்க முற்பட்டார். அடுத்த கணமே அவருடைய முகம் மாறுதலடைந்தது. "என்ன முல்லா அவர்களே, இது சூப்பாக இல்லையே, வெறும் சுடு நீராக இருக்கிறதே?" என்று ஏமாற்றத்தோடு கேட்க அதற்கு முல்லா,

"நண்பர் அவர்களே உங்களுடைய நண்பருடைய நண்பருக்கு நண்பரான அன்பர் கொடுத்த கோழியிலிருந்து தான் இந்த சூப் தயாரிக்கப்பட்டது. கோழி பரிசளித்தவரின் நண்பர்கள் இங்கே வரும்போதெல்லாம், அவர் கொடுத்த கோழியைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சூப்பைத் தான் கொடுக்கிறேன்.

இன்று நீங்கள் அருந்திய சூப்பும் கூட, அந்தக் கோழியிலிருந்து தயாரிக்கப்பட்ட சூப்பினுடைய சூப்பினுடைய சூப்பினுடைய சூப்பாகும். அதனால் தான் இந்தச் சூப் சுடுநீர் போலிருக்கிறது" என்றார், வந்த விருந்தாளியோ மெல்லவும் முடியாமல், முழுங்கவும் முடியாமல் அந்தச் சூப்பைக் குடித்து விட்டு, சொல்லாமல், கொள்ளாமல் போய்விட்டார். அதற்குப் பிறகு முல்லாவின் வீட்டுப் பக்கம் யாருமே வரவில்லை.

# பொன்மொழிகள்


"பாம்பானது விஷத்தன்மையுடன் இல்லாவிட்டாலும் இருப்பது போல நடிக்க வேண்டும்"



பொருள்: விஷம் இல்லாத பாம்புகள் எத்தனையோ இருக்கிறது. ஆனால் பாம்பென்றாலே அதற்கு பயப்படும் சுபாவம் மனிதர்களிடத்தில் உள்ளது. அதுபோலத்தான் நாம் எவ்வளவு பலவீனமானவராய் இருந்தாலும் நமது பலவீனத்தை மற்றவர் முன் காட்டக்கூடாது.

"மலரின் வாசனையானது காற்று வீசும் திசையில்தான் பரவும். ஆனால் ஒருவரின் நல்ல குணம் அனைத்து திசைகளிலும் பரவும்"

பொருள்: மணம் கமழும் மலரின் நறுமணம் கூட காற்று எந்த திசையில் வீசுகிறதோ அதை நோக்கி நகரும். ஆனால் ஒரு நல்ல மனிதரின் குணம் அவரை சுற்றியுள்ள அனைவருக்கும் அனைத்து திசைகளிலும் பரவக்கூடியது. மலர் போல் இல்லாமல் நல்ல மனிதராய் இருப்பதே நமது சுற்றத்தாரை தீர்மானிக்கும்.



# குடும்ப பிணைப்பு



குடும்பத்தின் மீது அதிக பற்று மற்றும் பிணைப்பு வைக்க வேண்டும் என்ற நல்ல பழக்கத்தை கண்டிப்பாக குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்து, அதன் முக்கியத்துவத்தையும் சொல்லிக் கொடுங்கள். குடும்ப உறுப்பினர்கள் அடிக்கடி சந்தித்து, ஒன்றாக அமர்ந்து உண்ணுங்கள். ஏனெனில் குழந்தையை ஒரு சிறந்த மனிதனாக வளர்க்க குடும்ப பிணைப்பு மிகவும் அவசியம்.

நல்ல பழக்கவழக்கங்கள் கடைசி வரை நீடிக்கும். பாலகர்களுக்கு நல்ல பழக்கவழக்கங்களை சொல்லிக் கொடுப்பதன் முக்கியத்துவத்தை புரிந்துக் கொள்ளுங்கள். அது தான் அவர்களின் தனித்தன்மையை வடிவமைக்கும்.

ஆசிரியர் : அமெரிக்கா எங்கே உள்ளது?

மாணவன் : தெரியாது சேர்!

ஆசிரியர் : பெஞ்சின் மேல் ஏறி நில்லுடா..!

மாணவன் : ஏறி நின்றால் தெரியுமா சேர்?



வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழி தேடும்.
உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழி தேடும்.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அவர்கள் குழம்புவார்கள் என்பதற்காக விடமுடியுமா?

பாராளுமன்றத்தின் அவலநிலை நீண்டு செல்கையில், ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கங்கணம் கட்டி நிற்கிறது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வருவதற்குத் தமது ஆதரவு உண்டென்பதை எழுத்து மூலமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றுக்கு சமர்ப்பித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக வரக்கூடாது என நினைத்தபோது ரணில் விக்கிரமசிங்க தான் பிரதமராக வரவேண்டும் என்பது வேறு.

அதாவது மகிந்த ராஜபக்ஷ பிரதமராக வருவதை நாங்கள் விரும்பவில்லை என்று கூட்டமைப்புக் கூறுமாக இருந்தால் அதற்கான பொருள் விளக்கமும் கருத்துரைப்பும் தமிழ் மக்கள் சார்ந்து தமிழ் மக்களின் விருப்பு நிலை சார்ந்து முன்வைக்கப்படும்.

மாறாக ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக வரவேண்டும் என்று கேட்பதானது கூட்டமைப்பு மகிந்தவை மட்டுமல்ல யார் எல்லாம் பிரதமராக வரத் தகைமையுடையவராகக் கருதப்படுகின்றனரோ அவர்கள் எல்லாம் அந்தப் பதவிக்கு வரக்கூடாது என எதிர்ப்பதாக பொருள் கொள்ளப்படும்.

உதாரணமாக சஜித் பிரேமதாசவை பிரதமராக்குவதற்கு அரசியல் மட்டத்தில் இணக்கப்பாடுகள் ஏற்பட்டாலும் அதனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கும்.

மாறாக கூட்டமைப்பை பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக வரவேண்டும் என்பதுதான்.

பெயர் குறித்து, இவர்தான் பிரதமராக வரவேண்டும் எனக் கூட்டமைப்பு எழுத்துமூலமாக தனது விருப்பத்தை அறிவித்துள்ளமையானது கூட்டமைப்பின் இராஜதந்திரப் பலவீனம் என்றே கூற வேண்டும்.

சரி, அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அமுலாக்க ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வருவது அவசியம். அவருடன்தான் எமக்கு இணக்கப்பாடு உண்டு என்றால், எழுத்துமூலமான ஒப்பந்தம் ஏதும் தரப்பட்டதா என்ற கேள்வி எழும்.

இந்தக் கேள்விக்கான பதில் இல்லை என்பதுதான் இதுவரைக்குமான பதில். எழுத்து மூலமான உத்தரவாதத்தைப் பெறாமல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிப்பது புத்திசாலித்தனமா என மறுத்தான் தொடுத்தால்,

எழுத்துமூலமான உத்தரவாதத்தை ரணில் விக்கிரமசிங்கவிடம் பெற்றால் தென்பகுதியில் எதிர்த்தாக்கம் அதிகமாக இருக்கும் என்பது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் பதில்.

இங்குதான் தமிழ் அரசியல் தலைமையின் பலவீனமும் தமிழ் இனத்தின் மீது விசுவாசமற்ற தன்மையும் வெளிப்பட்டு நிற்கிறது.

தென்பகுதியில் எதிர்ப்பு ஏற்படும் என்பது பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டிய தேவை இங்கு இல்லை. எழுத்துமூலமான உத்தரவாதத்தைத் தந்தால் அதற்கு எதிர்ப்பு ஏற்படுமெனில், அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைப் பாராளுமன்றில் முன்வைக்கும்போதும் எதிர்ப்பும் குழப்பமும் ஏற்படவே செய்யும்.

தவிர, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் நினைப்பதுபோல இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இரகசியமான விவாதம் அல்ல.

எனவே தென்பகுதி எதிர்க்கும் என்று அஞ்சி எழுத்துமூலமான உறுதிப்பாட்டைப் பெறாமல் விடுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் பெரும் பாதகமேயன்றி வேறில்லை.

# முச்சக்கரவண்டி மற்றும் Taxiகளுக்கு மீற்றர் பொருத்துதல் தொடர்பான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தில் 10.12.2018ஆம் திகதி கௌரவ யாழ்.மாநகர முதல்வர், வடமாகாண உள்ளூராட்சி மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், வடமாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், மாநகர ஆணையாளர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை பொறுப்பதிகாரி, அளவீட்டு நியமங்கள் பணியக உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைவாக,

01.01.2019ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் யாழ். மாவட்டத்தில் பயணிகள் சேவையிலீடுபடும் முச்சக்கரவண்டிகள் மற்றும் Taxiகள் கீழ்வருமாறு கட்டணங்களை அறவிட்டு சேவையில் ஈடுபடுவதற்கு அறிவுறுத்தப்படுவதுடன் தங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிகள் மற்றும் Taxi உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தி பொது மக்களுக்கு சுமுகமான மற்றும் பாதுகாப்பான சேவையிலீடுபடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம)

| நேரம் | தூரம் | கட்டண அறவீடுகள் | |
|---|---|---|---|
| | | முச்சக்கரவண்டிகள் | Taxi (A/C) |
| பகல்நேர சேவை (மு.ப 5.00 - பி.ப 8.00 முச்சக்கரவண்டி) (மு.ப 5.00 - பி.ப 9.00 Taxi) | 1ஆவது Km | 70.00 | 100.00 |
| | அடுத்த ஒவ்வொரு Km | 50.00 | 50.00 |
| | காத்திருப்புக் கட்டணம் | 2.00 (நிமிடத்துக்கு) | 3.00 (நிமிடத்துக்கு) |
| இரவு நேர சேவை (பி.ப 8.00 - மு.ப 5.00 முச்சக்கரவண்டி) (பி.ப 9.00 - மு.ப 5.00 Taxi) | 1ஆவது Km | 80.00 | 110.00 |
| | அடுத்த ஒவ்வொரு Km | 50.00 | 50.00 |
| | காத்திருப்புக் கட்டணம் | 2.00 (நிமிடத்துக்கு) | 4.00 (நிமிடத்துக்கு) |
| மேலதிக சேவை (Taxi மட்டும்) | 10 Km | | 600.00 |
| | 120 Km | | 6000.00 |

## ஆசிரியர் செயலமர்வுக்கான திகதியில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான உயர்மட்ட கல்விச் செயற்றிட்டத்தின் கீழான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு முன் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் அறியத் தந்துள்ளார்.

எனவே உரிய நேரத்தில் குறித்த செயலமர்வில் பங்கு கொண்டு பயன்பெறுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-3,9)

## சுன்னாகம் பகுதியில் விபத்து வயோதிபப் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பாதசாரிக் கடவையில் வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபப் பெண்ணை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த பெண் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை கே.கே.எஸ்.வீதி வாழ்வகத்துக்கும் மருதனார் மட சந்திக்குமிடைப்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக சென்ற மோட்டார் சைக்கிள் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் பாதசாரிக் கடவையினால் வீதியைக் கடக்க முற்பட்ட பெண்ணை மோதி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த பெண் சுன்னாகம் கண்ணகை அம்மன் கோவிலடியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டதாகவும் வீதியால் சென்றவர்களின் உதவியுடன் குறித்த பெண்ணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-78)

## ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை

ஹர்ஷ தெரிவிப்பு

அரச நிதியினை கட்டுப்படுத்தவோ, செலவிடவோ எவ்வித அதிகாரங்களும் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படவில்லை. நிதி தொடர்பிலான அதிகாரங்கள் பாராளுமன்றத்திற்கே முழுமையாக காணப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியல் விடயங்கள் தொடர்பில் தவறான தீர்மானங்களையே தொடர்ந்து எடுக்கின்றார். இவர் பிறரது ஆலோசனைகளுக்கு இணங்கவே செயற்படுவதனால் ஆலோசனை வழங்குபவர்கள் அரசியலமைப்பு மற்றும் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் உண்மையான விடயங்களை அறிவுறுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.(ம-3)

## அரசியல் குழப்ப நிலையானது காணி விடுவிப்பை பாதிக்காது

### இராணுவ ஊடகப் பேச்சாளர் சுமித்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலையானது காணி விடுவிப்பு விவகாரத்தில் எந்த விதப் பாதிப்பையோ பின்னடைவையோ ஏற்படுத்தாது என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கெனவே அறிவித்தமைக்கு இணங்க இவ் வருட இறுதிக்குள் வடக்குக் கிழக்கில் படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும்.

மேலும் வடக்கு. கிழக்கில் படையினர் வசமுள்ள அனைத்துக் காணிகளையும் உடனடியாக விடுவிப்பது என்பது நடைமுறையில் இயலாத காரியம்.

காணிகளின் உண்மையான உரிமையாளர்களை இனங்கண்டு கொள்ள வேண்டும் என்பதுடன், உறுதிப்படுத்தாமல் அனைத்துக் காணிகளையும் விடுவிப்பதில் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன.

எனவே படையினர் வசமுள்ள காணிகளில் காணி உறுதிப்பத்திரம் உள்ள காணி உரிமையாளர்களின் காணிகள் முதற்கட்டமாக விடுவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-4)

## குறைகளைத் தவிர்க்க...

- முதலில் குறையில்லாது வாழப் பழகுங்கள்.
- பிறரைக் குறை கூறாதீர்கள். உங்களை குறையை நீங்கள் உணருங்கள்.
- தங்கள் மீது தவறு இருந்தால் தயங்காமல் மன்னிப்புக் கேளுங்கள்.
- பிறர் குறைகளை மிகைப்படுத்தாதீர்கள். அவர்களைத் திருத்த அன்பான முறையிலேயே போதியுங்கள்.
- தங்களின் குறைகளைத் தவிர்த்து மன நிறைவுகளையே மிகைப்படுத்திக் கொள்ளுங்கள். வாழ்வில் குறைகளே இல்லாது வாழுங்கள்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நீங்கள் எல்லை இல்லாத வலிமை பெற்றவர்கள். உங்களின் உண்மை இயல்போடு ஒப்பிடும்போது காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல.
- இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். என்னால் இயலாது என்று எதையும் மறுக்காதீர்கள். எதையும் உங்களால் சாதிக்க முடியும்.
- பலவீனத்திற்குப் பரிகாரம் வலிமையைக் குறித்து சிந்திப்பதே.
- உபநிஷதங்களில் இருந்து கிளம்பி, அறியாமைக் குவியல் மீது குண்டைப் போல வெடிக்கும் சொல் "அஞ்சாமை" என்பது தான். இந்த ஒற்றைச் சொல்லில் தான் வேதத்தின் சாரம் அடங்கியிருக்கிறது. இந்தச்சொல் தான் உலகையே மாற்றி அமைக்கும்.
- கடுமையாக உழைக்க முன்வந்தால் குறிக்கோளை எளிதில் அடையலாம்.
- மனதில் வலிமை இருந்தால் மகிழ்ச்சியும் வளமும் நிறைந்த நிரந்தரமான வாழ்வு கிடைக்கும். பலவீனம் இருந்தால் இடையறாத துன்பமும், சித்திரவதையுமாக வாழ்வு அமையும்.

# ரஜீவன் அதிரடி ஆட்டம்

# கரவெட்டி ஞானம்ஸ் சம்பியன்













அறிஞ்ஜயாண்ணை நடத்திய மாபெரும் மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

அணிக்கு 8 பேர் ஆறு பந்துப் ப்ரிமாற்றங்கள் கொண்ட இத் தொடரின் இறுதிப்போட்டி கரவெட்டி ஞானம்ஸ் அணி கிளிநொச்சி உதயசூரியன் அணியுடன் பலப் பரீட்சை நடத்தியது.

பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உதயசூரியன் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி 8 ஓவர்கள் நிறைவில் 79 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் குமார் 26 ஓட்டங்களும் தீபன் 22 ஓட்டங்களும் பெற்றுக் கொடுத்தனர்.

80 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணியின் ஆரம்ப வீரர் ரஜீவனின் அதிரடி ஆட்டம் ஞானம்ஸ் அணியை 5.1 ஓவர்களிலேயே வெற்றி கிடைத்தது.

60 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த ரஜீவன் போட்டியின் ஆட்டநாயனநாயகத் தெரிவு செய்யப்பட்டார்.

தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக சேந்திரனும் தொடர் ஆட்ட நாயகனாக கிளிநொச்சி உதயசூரியன் அணியின் குமாரும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

## நாவாந்துறை சென்.மேரிஸ் அணிக்கு முதல் தோல்வி

## கொழும்பு மொகரஸ்முல்ல அணி வெற்றி



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின்- பிரிவு 1 அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியானது தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில்நாவாந்துறை சென். மேரிஸ் அணி தனது நான்காவது போட்டியில் கொழும்பு மொரகஸ்முல்லை அணியைச் சந்தித்தது. இந்தப் போட்டி, கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

மொரகஸ்முல்லை முதலாவது கோலை அடித்தது. அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அடுத்த சில நிமிடங்களில் சென்.மேரிஸ் அணி பதில் கோலை அடித்தது. முதற்பாதியாட்டம் 1:1 என சமநிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் மொரகஸ்முல்லை அணி, இரண்டாவது கோலை அடித்தது. இதற்குப் பதிலடி கொடுக்க சென்.மேரிஸ் அணி பலமுறை முயன்றும் அது பயனற்றுப் போனது. முடிவில், மொரகஸ்முல்லை அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

நாவாந்துறை சென். மேரிஸ் அணி இதுவரையில் நான்கு போட்டிகளில் விளையாடியுள்ளது. முன்னர் விளையாடிய 3 போட்டிகளில், முதற்போட்டியில் றெட்சன் அணியையும் இரண்டாவது போட்டியில் கொழும்பு கூரே அணியையும் மூன்றாவது போட்டியில் ஓல்ட் பென்ஸ் அணியையும் வென்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-26)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## முதலாவது டெஸ்டில் இந்தியா அபார வெற்றி



அவுஸ்திரேலிய அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி அபார வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நடைபெற்றது.

இதில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 250 ஓட்டங்களும் அவுஸ்திரேலிய அணி 235 ஓட்டங்களும் எடுத்தன.

இதனால் 15 ஓட்டங்கள் முன்னிலையுடன் விளையாடிய இந்திய அணி 307 ஓட்டங்கள் குவித்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

323 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலியா அணியில் முன்னணி வீரர்கள் அடுத்தடுத்து பெவலியன் திரும்பினர்.

நிதானமாக ஆடிய ஷேன் மார்ஷ், டிராவிஸ் ஹெட் ஜோடி கவனமாக விளையாடிய நிலையில், 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலியா 4 விக்கெட் இழப்பிற்கு 104 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மார்ஷ் 31, ஹெட் 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில் நேற்று கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து ஆடிய ஷேன் மார்ஷ் அரைச்சதம் கடந்தார்.

ஆனால் அவர் 60 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். முன்னதாக ஹெட் 14 ஓட்டங்களிலும் அவுட் ஆனார்.

விக்கெட்டை காப்பாற்ற கடுமையாக போராடிய டிம் பெயின் 41 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், அவரது விக்கெட்டை பும்ரா கைப்பற்றினார். 187 ஓட்டங்களுக்குள் 7 விக்கெட்டுகளை இழந்து தோல்வியை தவிர்க்க போராடி வந்த அவுஸ்திரேலிய அணிக்கு கடைசி கட்டத்தில் மிட்சல் ஸ்டார்க், நாதன் லயன் சிறப்பான ஆட்டத்தை கொடுத்து இந்திய அணியின் வெற்றியை தள்ளிப்போட்டனர்.

இருப்பினும் ஸ்டார்க் 28 ஓட்டங்களிலும், ஜோஸ் ஹசல்வுட் 13 ஓட்டங்களிலும் அவுட்டாக இறுதியாக அவுஸ்திரேலிய அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 291 ஓட்டங்கள் எடுத்து 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

அவுஸ்திரேலிய மண்ணில் இந்தியா முதல் முறையாக தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளது. அதுமட்டுமன்றி இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா போன்ற வெளிநாட்டு தொடர்களில் ஆசிய கப்டன்கள் இதுவரை வெற்றி பெற்றதில்லை.

தற்போது ஹோலி தலைமையிலான இந்திய அணி அந்த மூன்று நாடுகளிலும் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றுள்ளதால், ஹோலி புதிய சாதனை படைத்துள்ளார். (க)

## நீதிமன்ற தீர்ப்பு...

வாக்குரிமையின் ஊடாக தீர்வை வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுன முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவர் தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தின் நிர்வாக செயற்பாடுகளுக்கு மாத்திரமே மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்காலிக தடையுத்தரவை பிறப்பித்துள்ளது. இத் தீர்ப்பினை தொடர்ந்து நாட்டில் பிரதமர், அமைச்சரவை கிடையாது என்று மாறுபட்ட கருத்துக்கள் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இது முற்றிலும் தவறான நிலைப்பாடாகும்.

தற்போதை அரசியல் நெருக்கடியின் காரணமாக அடுத்த வருடத்தில் அரச நிர்வாகத்தின் முன்னெடுப்புக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படும்.

இதற்கு ஜனவரியில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் அல்லது நாட்டு நலனை கருத்திற் கொண்டு இடைக்கால வரவு செலவு திட்டத்தினை முதல் காலாண்டிற்கு அமுல்படுத்த வேண்டும் என்றார். (ம)

## வெளியாக...

துள்ளார்.

நீதிமன்ற தீர்ப்பு இந்த வாரம் வெளியாகவுள்ள நிலையிலேயே உயர்ஸ்தானிகர் இதனை தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் செய்தியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஒருமுன்னாள் சட்ட மாணவன் என்ற அடிப்படையில் நான் தீர்ப்பை அறிவதற்காக காத்திருக்கின்றேன் என உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

இந்த தீர்ப்பு வரலாற்றை உருவாக்கும் தீர்ப்பாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் சட்டக்கல்லூரி மாணவர்கள் பல தலைமுறைக்கு இந்த தீர்ப்பு குறித்து கற்பார்கள் என உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (ம)

## பொது வாக்...

மீதான தீர்ப்பை உயர் நீதிமன்றம் இன்று வழங்கும் வகையில் பிரதம நீதியரசரிடம் கோருமாறு சட்டமா அதிபருக்கு இதன்போது ஜனாதிபதி அறிவுறுத்தினார். (ம)

# இடைக்காலத்தடை தொடர்பில் சிலர் போலிப்பிரசாரத்தை முன்னெடுக்கிறார்கள்

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

மேன் முறையீட்டு நீதிமன்றம் வெளியிட்ட இடைக்கால தடை உத்தரவு தொடர்பில் சிலர் போலிப் பிரசாரங்களை முன்னெடுக்கிறார்கள் என்று பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாட்டின் பிரதமரோ அமைச்சரவையோ இல்லை என்றும் அரச பொறி முறை அழிவுக்குள்ளாகும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் கூறி வருகிறார்கள். இவ்வாறான பிரசாரங்களில் எந்தவித உண்மையும் இல்லை.

பிரதமர் பதவியும் அமைச்சரவையும் அவ்வாறே காணப்படுகின்றன. அவற்றின் அதிகாரங்களை மாத்திரமே தடை உத்தரவின் மூலம் பிரயோகிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேர்தலை நடத்துவதற்காக மக்களை சந்திக்க பொதுஜன பெரமுன தயார் என்று அங்கு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

மக்களிடமிருந்து மறைந்திருக்க ஐக்கிய தேசிய கட்சி தலைவர் உட்பட பிரதிநிதிகள் முயன்று வருகிறார்கள். கட்சிக்குள் ஜனநாயகத்தை வழங்காத ரணில் விக்கிரமசிங்க நாட்டில் எவ்வாறு ஜனநாயகத்தை பாதுகாப்பார் என்றும் அவர்கேள்வி எழுப்பினார். (ம-3)

# 5 மாணவர்கள் கொலை தொடர்பில் இலங்கை நீதியை நிலை நாட்டவில்லை

## சர்வதேச மன்னிப்புசபை குற்றச்சாட்டு

(திருகோணமலை)

திருகோணமலையில் 2006ஆம் ஆண்டு ஐந்து மாணவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் நீதியை நிலைநாட்ட இலங்கை தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபை இந்தக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

ராகிஹர் மனோகரன் மற்றும் நான்கு மாணவர்கள் 2006ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதியன்று இலங்கையின் படையினரால் கொல்லப்பட்டனர்.

இந்த கொலைகள் தொடர்பில் பொலிஸாரின் விசாரணை மற்றும் ஜனாதிபதி விசாரணைகள் இடம்பெற்றபோதும் இதுவரை பொறுப்புக்கூறல் எதுவும் இடம்பெறவில்லை.

இந்தநிலையில் குறித்த மாணவர்களின் கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும் என்று மன்னிப்புசபை இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-3)

## இன்றைய தினமே...

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை ஒரு வாரத்துக்குள் தீர்க்கப்படும் என்று ஜனாதிபதி வழங்கிய கால அவகாசம் இன்று செவ்வாய்க்கிழமை நிறைவடையும் நிலையில் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

எனினும் உயர் நீதிமன்றின் தீர்ப்பு வரும் வியாழன் அல்லது வெள்ளிக்கிழமையே வழங்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக மனுதாரர்களின் சட்டவாளர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தை கலைத்து வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 13 அடிப்படை உரிமைகள் மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த 7ஆம் திகதி நிறைவடைந்தன. எனினும் தீர்ப்புத் திகதி அறிவிக்காமல் உயர் நீதிமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

அத்துடன், தீர்ப்பு வழங்கப்படும் வரை ஜனாதிபதியின் கட்டளையை இடைநிறுத்திவைக்கவும் உயர் நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்த நிலையில் அடிப்படை உரிமை மனுக்கள் மீதான தீர்ப்பை தாமதிக்காமல் இன்று செவ்வாய்க் கிழமை வழங்குமாறு பிரதம நீதியரசரிடம் கோருமாறு சட்ட மா அதிபருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை அறிவுறுத்தல் வழங்கினார். (ம)

## ஆளுநர் அலுவலகம் முன்...

வட மாகாணத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் 288 பேருக்கு நிரந்தர நியமனம் கிடைக்கக் கோரி நேற்றையதினம் 10ஆம் திகதி முதல் தொடர்ச்சியா உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக வட மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் யோ.அருட்செல்வம் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் உள்ள 1044 தொண்டர் ஆசியர்களுக்கு இரு கட்டங்களாக ஆசிரியர் சேவையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போதும் எஞ்சிய 288 பேருக்கு இதுவரையில் நிரந்தர நியமனம் வழங்கவில்லையென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆசிரிய நியமனத்திற்கு சகல தகுதிகளும் தம்மிடம் இருப்பதாகவும் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் நடைபெற்ற தேர்வில் தாம் தோற்றியதாகவும் இதுவரை தமக்கான நியமனம் வழங்கப்படவில்லையென குற்றம் சாட்டுகின்றனர்.

முன்பு நடைபெற்ற தொண்டர் ஆசியரியர் தேர்வில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் அதாவது பாடசாலையில் கற்பிக்க தகுதி இல்லாதவர்களும், வேறு அரச துறையில் வேலைபார்த்தோருக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கும் வரை தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ள்தாக அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# நாட்டின் நீதித்துறைக்கு இணங்கவே ஜனாதிபதி செயற்பட வேண்டும்

## மரிக்கார் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவாக்கம் மற்றும் நீதித்துறைக்கு இணங்கவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி செயற்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் குறிப்பிட்டுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோதமான அரசாங்கத்தை ஸ்தாபித்து ஒரு மாதமும் 14 நாட்களும் கடந்துள்ளது. நாம் 4 தடவைகள் சட்டவிரோதமான பிரதமரை தோற்கடித்துள்ளோம்.

அத்தோடு, மேன்முறையீட்டு நீதிமன்றமும் இந்த தரப்பினருக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது. அவர்களுக்கு 113 பேர் இல்லை என்பதை அவர்களே உணர்ந்துள்ளார்கள். இந்தநிலையில் நாம் 12 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நம்பிக்கை வாக்கெடுப்பொன்றை நடத்தி பெரும்பான்மையை நிரூபிக்கத் தீர்மானித்துள்ளோம்.



மேலும், இந்த வெள்ளிக்கிழமைக்கு முதல் நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கும் என்றும் நாம் நினைக்கிறோம். இவ்வாறான நிலையில், ஜனாதிபதியால் ரணிலை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறமுடியாது போகும். ஜனாதிபதிக்கு அரசமைப்பை மீறி செயற்பட முடியாது.

சட்டவாக்கம் மற்றும் நீதித்துறைக்கு இணங்கவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி செயற்பட வேண்டும். எனவே, அவருக்கு இதனை மீறி செயற்பட முடியாது என்பது அரசமைப்புக்கு உட்பட்டதாகும். இந்தத் தரப்பினரின் செயற்பாட்டால், முழுநாடும் தலைகீழாகிவிட்டது.

எனவே, இன்னும் 29 நாட்களில் ஜனாதிபதி தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். மக்களுக்கு யார் நல்லவர் கெட்டவர் என நன்றாகத் தெரியும். அதைவிடுத்து, பொதுத் தேர்தல், மாகாணசபைத் தேர்தலையெல்லாம் வைக்கத் தேவையில்லை.

எமக்கு பெரும்பான்மை பலம் உள்ளது. இதனால், ஜனாதிபதி தான் பதவியிலிருந்து வெளியேற வேண்டும். நாம், எதற்கும் தயாராகவே இருக்கிறோம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2018/12/10
சீட்டிழுப்பு இலக்கம் 3808
W 8 7 6 2 8 4
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 2018/12/10
சீட்டிழுப்பு இலக்கம் 1385
எழுத்து வெற்றி இலக்கம்
13 04 06 37 41 11 31
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/12/2018
சீட்டிழுப்பு இலக்கம் 316
வெற்றி இலக்கங்கள்
D 10 03 15 34 59
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.12.10
சீட்டிழுப்பு இலக்கம் 1969
C 31 53 59 75
தேசிய லொத்தர் சபை

## போதைப்பொருள்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தலிற்காக எந்த தனிநபரும் சட்டத்தினை பலவீனப்படுத்தக் கூடாது என குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, சட்டங்களை எந்த இடைவெளியும் இல்லாமல் நடைமுறைப்படுத்தவேண்டியது முக்கியம் என குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் குற்றங்களிற்காக தண்டனை வழங்கப்பட்டநிலையிலும் தொடர்ந்தும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களிற்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்து முன்னர் கடும் சர்ச்சைகளை உருவாக்கியிருந்த நிலையிலேயே அவர் மீண்டும் அதே கருத்தை வெளியிட்டுள்ளார். (ம)

## தமிழரின் உரிமை...

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கம், இனவாத குடியேற்றங்களுக்கு எதிரான இயக்கம் மற்றும் சமவுரிமை இயக்கம் என்பன இணைந்து பொது மக்களைத் திரட்டி அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, அரசியல் தீர்வு, தோட்டத்தொழிலாளர் சம்பள உயர்வு, இனங்களுக்கு இடையிலான சமத்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை வலியுறுத்தி நேற்று திங்கட்கிழமை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன், ஏராளமான பொதுமக்கள் பங்கெடுத்திருந்தனர். மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்புலவு காணி விடுவிப்பிற்காக தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

போராட்டக்காரர்கள் எமது காணிகளை விடுதலை செய், இராணுவமே வெளியேறு, அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய், புதிய பயங்கரவாதத்தடைச் சட்டத்தை உடன்நிறுத்து, காணாமல் போனோருக்கு என்ன நடந்தது?, தோட்டத்தொழிலாளர் கூலியை ஆயிரத்து 500 ரூபாயாக அதிகரிக்க வேண்டும், இனவாதக் குடியேற்றத்தை உடன்நிறுத்து, மகாவலியின் போர்வையில் நடத்தப்படும் தமிழர் காணிக்கொள்ளையை நிறுத்து, மைத்திரி கொடுத்த வாக்கை நிறைவேற்று, எங்கள் தாயகத்தை துண்டாடாதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (ம)

## நீதிமன்ற அவமதி...

சாட்டுக்கள் எழுந்த நிலையில், அது குறித்து விசாரிக்க குழுவொன்றை அமைத்த முன்னாள் வடக்கு முதல்வர் பதவி நீக்க நடவடிக்கை எடுத்தார்.

இதற்கமைய, வடக்கு மாகாணசபையின் அமைச்சர்கள் பதவி நீக்கப்பட்டு, புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதனையடுத்து முன்னாள் முதலமைச்சரின் தீர்மானத்தை இரத்துச் செய்யும் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி டெனீஸ்வரன் மேன்முறையீடு செய்திருந்தார்.

அதன்படி டெனீஸ்வரனை அமைச்சர் பதவியிலிருந்து நீக்குவதற்கு விக்னேஸ்வரன் எடுத்த தீர்மானத்துக்கு தடை உத்தரவு பிறப்பித்து மீண்டும் அவருக்கு அந்தப் பதவியை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

நீதிமன்றத்தின் அந்த உத்தரவை செயற்படுத்தாமை காரணமாக முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் நீதிமன்றத்தை அவமதித்ததாக கூறி வடக்கு மாகாண முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சர் டெனீஸ்வரன் மீண்டும் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜிம் பயிற்சி நிலை...

சபையின் தீயணைப்புப் படை வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

சம்பவத்தை அடுத்து சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. எனினும் அவர்கள் தீயணைப்புப் படை வருகை தந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னரே வருகை தந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது சுன்னாகப் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## 7 நாட்களுக்குள்...

ங்கில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் விசேட மாநாட்டிலேயே ஜனாதிபதி இவ்வாறு கால அவகாசத்தைக் கோரியிருந்தார்.

ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்து, இன்று 11ஆம் திகதியுடன் ஏழு நாட்கள் நிறைவடைகின்றது. இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக பிரதமர் பதவி வெற்றிடமாக காணப்படுவதுடன் நாட்டில் அமைச்சரவை ஒன்றும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் இவ்வாறானதொரு நெருக்கடி நிலை ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இலங்கையில் தொடரும் அரசியல் நிலவரம் தொடர்பில் உன்னிப்பாக அவதானித்து வருவதாக சர்வதேச நாடுகள் பலவும் கூறியுள்ளன.

இதேவேளை நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுரைகள் கூறப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே, ஏழு நாட்களுக்குள் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இன்றுடன் அவர் குறிப்பிட்ட ஏழு நாட்களும் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-4553)
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

கடை வாடகைக்கு
திருநெல்வேலி சந்தைக்கு முன்னால் 3 Base மின்சாரத்துடன் கூடிய விசாலமான கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு:
021 222 8875

உடனடி வேலைவாய்ப்பு
எமது சர்வதேச நிறுவனத்தின் அரச அங்கீகாரம் பெற்ற இலங்கைக் கிளைகளில் 2018-ம் ஆண்டு உயர்தரம் கற்ற மாணவர்களுக்கான சிறந்த வேலைவாய்ப்பு.
● பயிற்சியுடன் கூடிய நிரந்தர வேலைவாய்ப்பு
● எதிர்காலத்திற்கான திட்டமிடல்
● சிறந்த சம்பளத்துடன் கூடிய பதவி உயர்வு
● வடக்கு, கிழக்கு விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை.
தொடர்புகளுக்கு: 0775528534
(C-4664)

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456/0762 669 614
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.
(C-4588)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(7856)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்



## சின்னவி இளையதம்பி

அளவெட்டி தெற்கு அளவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவி இளையதம்பி அவர்கள் நேற்று (10.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதி - முத்தி தம்பதிகளின் அன்பு மருமகனும், மாணிக்கம் அவர்களின் அன்புக் கணவரும், கனகம்மா, பாலு, காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, பொன்னம்பலம், மாரிமுத்து, கண்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மராணி, ஜெயலொளிபகவான், குலகுமார், ஜெகநாதன், ஜெயசேகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகாராசா (அமரர்), வசந்தமாலா, நளாயினி, ஜெனோபா, கமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனையடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (7859)

தகவல்:
குடும்பத்தினர்


BSc
காமராசர் பல்கலைக்கழகம் (வெளிவாரி) மதுரை
◆ மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
◆ A/Lஇல் முழுமை சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
◆ இப்பட்ட நெறியானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
◆ பரீட்சைகள் யாவும் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தில் நடைபெறும்.
◆ இப்பட்ட நெறியின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.
◆ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறும்.
◆ இப்பட்ட நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பம் 15.12.2018 (காலை 8.00 மணி)
யாழ் இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
021 222 8148, 077 314 4762,
077 846 9721
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C-4655)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.